egistered No. M. 2330 ‘SIDDHANTHAM’
Vol. 24—No. 3

ACC-NO-33772

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

‘தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே’

மலர் 24 | விக்ருதி பங்குனி 1951 மார்ச்சு | இதழ் 3

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்
40, முத்தையா முதலி தெரு, வேளாளதேனும்பேட்டை, சென்னை- 6

சமாஜ செய்திகள்

1951 சைவப் புலவர் தேர்வுக்குப் பாடதிட்டத்தை மாற்ற இருப்பதால் பாடதிட்டமும் விண்ணப்பத் தாளும் கேட்டவர்க்கு அவை அனுப்பப்படவில்லை; அவை ஏப்ரலில் அனுப்பப்பெறும்.

சமாஜ செயற் குழு

சமாஜ செயற்குழு மார்ச் 25-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு, இராயப்பேட்டை - ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் சைவப் புலவர் தேர்வின் பாடதிட்டத்தை மாற்றியமைக்கவும், இதர விஷயங்களை ஆலோசிக்கவும் கூடும்.

செய்தித் திரட்டு

18-2-51 திருவாவடுதுறை ஆதீனக் காந்தைத் தமிழ்க் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகப் பதின்மூன்றும் ஆண்டுவிழா திரு. S. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இலக்கிய ஆராய்ச்சியைப்பற்றிப் பேசினார். Dr. கோவிந்தன் மேனாட்டு வாழ்வியலைக் குறித்துப் பேசினார்.

21-2-51 திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் குரு பூசையின்போது நடந்த கூட்டத்தில் அருட்டிரு யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைமை வகித்தார். பல பேச்சுக்களும் மாணவர் மாணவிகள் சொற்போர் போட்டியும் நடைபெற்றது.

22-2-50 முதல் 26-2-51 வரை கோவை கோனியம்மன் திருவிழாவில் திரு. கிருபாநந்தவாரி அவர்களால் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

23-2-51 திருப்புகழ் தத்துவார்த்த பிரசங்க சபையின் சார்பில் புதுவை சுத்தானந்த அடிகள் தலைமையில் திரு. கிருபாநந்தவாரி 'தத்வார்த்தத்தை'ப்பற்றிப் பேசினார்.

24-2-51 சென்னைப் பல்கலைக் கழகத் தொடர்ச்சிச் சொற்பொழிவு கோவை அரசினர்கல்லூரியில் டாக்டர் R.K. சண்முகம் செட்டியார் தலைமையில் சுத்தானந்த பாரதியார் "தமிழ்மொழியின் வளர்ச்சி" என்பதுபற்றிப் பேசினார்.

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | விக்ருதி பங்குனி 1951 மார்ச் | இதழ் 3

உத்தரகோசமங்கை

1. இடம்: மானாமதுரை மண்டபம் பாதையில் இராமநாதபுரம் நிலயத்திலிருந்து மேற்கே 4 கல்லில் உள்ள உத்தரகோசமங்கை இரயிலடியிலிருந்து தெற்கே 4 கல்லில் உள்ள ஊர். சேதுநாட்டில் உள்ள புனிதத்தலம். ஊர் சிறியது. நிலம் கரிசல். மழை குறைவு. கோயிலைச் சுற்றி நான்கு மாடவீதிகள் உண்டு. ஆனால் பாழடைந்த தோற்றம்தான் உண்டு. சில வீடுகளே மெத்தை வீடுகள். ஜனத்தொகை 1500.

2. கோயில்: பெரியது. ஆனால் முற்றுப் பெறவில்லை. கிழக்கு நோக்கியது. இரண்டு பெருங் கோபுரங்கள் உண்டு. சுவாமி கோபுரம் முற்றுப்பெற்றது. 5 கல் தொலைவிலேயே நன்றாகத் தெரியும். இரயிலில் போகும்போதே தெரிகிறது. 7 நிலை கொண்டது. அம்மன் கோபுரம் ஒரு அடுக்கோடு முற்றுப்பெறாமல் நிற்கிறது. சுற்றுமதில் உண்டு. மேல்புறத்துக் கோபுரம் வெறும் கதவு நிலையோடு நிற்கிறது. முதல் தளமும் போடப்படவில்லை. உட்புறத்தில் ஒரு பெரிய தெப்பகுளம் வடகிழக்குப் பகுதியில் இருக்கிறது. நீர் வற்றியிருந்தது. அம்மன் கோயில் தனி வளைவு. சுவாமி கோவிலுக்கு வலது புறத்தில் அமைந்திருக்கிறது. நாற்பது ஆண்டுகளுக்கு முந்தி நகரத்தார்கள் $1\frac{1}{2}$ லட்சத்தில் திருப்பணி செய்திருக்கிறார்கள். மேற்கு மலைத்தொடரி

லிருந்து கல் கொண்டுவரப்பட்டு முன் மண்டபங்கள் செதுக்குக் கல்லால் கட்டப்பட்டு இருக்கின்றன. முடிவு ஆகவில்லை. விவகாரம் ஏற்பட்டு வேலை நின்றுவிட்டது. சுவாமி கோயில் பழையவேலை. தளம் காடு முடாக இருக்கிறது. இவ்விரு கோயில் மதில்களுக்கும் வடக்கே நடராசர் ஆலயம் தனியாக நிற்கிறது. இதில் நடராசர் பச்சைக் கல்லால் ஆயது. அதற்கு தனி உற்சவர் உண்டு. மூலத்தானம் பஞ்சசபைபோல ஆகியது. இங்கே இரத்தின சபை என்று பெயர். இதனால் இந்தத் தலம் ஆதி சிதம் பரம் எனப் பெயர் பெறும். வடமொழியில் இந்தத் தலம் ஸ்வதமித்ர திவ்விய சபை என்று பெயர். அபிஷேகத்திற் குப் படிகலிங்கமும் பச்சை லிங்கமும் உண்டு. அதே கட்டிடத்தில் சகஸ்ரலிங்கம் ஒன்று உண்டு. மற்றொரு புறத் தில் இலந்தை மரம் தலமரமாக இருக்கிறது. 5 அடி கனம் பல நூறு ஆண்டுகளுக்கு முந்தியதாம். பழம் நன்றாக இருக்கிறதாம். மற்ற விருட்சங்களில் வள்ளி, கேதகி என்பன.

3. மூர்த்திகள் : 'மங்கள நாதர்' மங்களேஸ்வரி என்று கூறுகிறார்கள். இக்கோயிலை மிகச் சிறப்பாய்ப் பாடிய மாணிக்கவாசகர் 'உத்தரகோசமங்கை அரசே' எனத் தான் விளித்திருக்கிறார். திருத்தசாங்கத்தில் ஈசனுக்கு பாண்டி நாடே நாடாகவும் உத்தரகோசமங்கை யூரே ஊராகவும் கூறியது காணலாம். முன்காலத்தில் இது சிறந்த ஊராக இருந்திருக்கலாம். அம்மன் உற்சவர் மிகப் பெரியது. வெகு அழகாயுள்ளது.

4. சோத்து : இவ்வூருக்கு 28 கிராமங்கள் உண்டாம். 35000 ரூ. இப்போதைய உணவு மந்திரி ரோச்விக்டோரியா வின் பாட்டி மங்களாம்பாள் இக்கோயிலுக்குச் சப்பரம், நகை முதலியன தந்திருக்கிறார்களாம். இப்போது இக் கோயிலின் ஆட்சி சேதுபதி வசம் இருக்கிறது. சித்திரை மார்கழித் திங்கள்களில் திருவிழா உண்டு. மார்கழியில் மணிவாசகர் சரிதம் நடைபெறும்.

5. பாடல் : திருவாசகத்தில் உத்தரகோசமங்கையில் வெளியிட்டதாக 2 பதிகங்கள் கூறப்பட்டுள்ளன. (நீத்தல்

விண்ணப்பம், திருப்பொன்னூசல் என்பன.) உத்தரகோசமங்கை என்ற சொல் பல தடவை வந்திருக்கிறது. இந்த ஊருக்கு ஒரு புராணம் உண்டு. 14 படலங்கள் கொண்டது. கிடைப்பதில்லை. வடமொழிப் புராணமும் உண்டாம். அது அர்ச்சகர் முனிசுவரக் குருக்களிடம் 72 அதிகாரங்கள் கொண்டதாக இருக்கிறதாம். அம்மன் பேரில் ஒரு பிள்ளைத் தமிழ் உண்டு. அதனை சண்முகம் பிள்ளை பதிப்பித்திருக்கிறார்.

6. தீர்த்தங்கள் : (1) அக்கினி தீர்த்தம் (பெரியது.) (2) பிரம்ம தீர்த்தம். (3) மங்கல தீர்த்தம். (4) அரிதீர்த்தம். (5) குமார தீர்த்தம். (6) சீதள தீர்த்தம். (7) வியாச தீர்த்தம். ஊருக்கு வடக்கே உள்ளது சீதள தீர்த்தம். இதனை 'சீதப்புனல்' என்று திருவெம்பாவை கூறுவதாம்.

7. மாணிக்கவாசகர் அட்டமாசித்தி அடைந்தபெருமை பெற்றதாம். அவர் இங்கே வெகுகாலம் இருந்திருக்க வேண்டும். இதற்குத் தனது பாடல்களில் ஒப்பற்ற பெருமை தந்திருக்கிறார். இக்கோவிலில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. 6 கல்வெட்டுகள் (83/05—88/05)படி எடுக்கப் பட்டிருக்கின்றன. பாண்டியர், நாய்க்கர் காலத்துத் தானங்களைக் கூறுகின்றன. 1355-ம் (மாறவர்மன் வீரபாண்டியன்) 1393—1425, 1505 (சேவப்ப நாயக்கன்), 1530 (முத்து வீரப்ப நாயக்கன்), 1450 (மாறவர்மன் வீரபாண்டியன்) கலந்தவை. கல்வெட்டுக்களின்படி உத்தரகோசமங்கை செப்பி நாட்டு ஸ்ரீயதேசத்தில் உள்ளது.

8. மடங்கள் : இவ்வூரில் உள்ள மடங்கள் சட்டிச்சாமி மடம். (2) கார்த்திகைச்சாமி மடம். (3) நகரத்தார் மடம். (விடுதி நந்தவனம்) (4) ஜமீன் மடம் (செப்பனிடப்பட்டிருக்கிறது). (5) திருவாவடுதுறை மடம்—கீழ்சந்நிதித் தெரு பாழடைந்திருக்கிறது. இந்த மடத்திற்கு வெள்ளக்குளம் என்ற கிராமம் இருக்கிறது. இராஜகோட்டைக் குளம் என்பதை அளித்திருக்கிறார்கள். 500 நன்செய் 500 புன்செய் உள்ளது.

"பொல்லாதவன் - நெறி நில்லாதவன்"

(அ. தா. ப. திருஞானசம்பந்தம், அருணை)

[மலர் : 24, இதழ் : 2, பக்கம் : 75-ன் தொடர்ச்சி]

அங்கத்தை மண்ணுக் காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றி பாவித்தேன் பரமானின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல் நாள் "நாயேன்" உன்னை
எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என் கண்டாயே.

பெருமானுர் எந்த அளவில் தன்னை இழிவு படுத்திக் கொள்கிறார் என்பதைக் காண்மின்! தங்கள் குறையை இறைவனுக்கு, வாய் விட்டுச் சொல்லத் தயங்கவில்லை பெரியோர்கள். அங்ஙனம் கூறிக்கொள்வதில் ஒரு தனி இன்பமே கண்டார்கள். அங்ஙனம் எண்ணிய எண்ணங்களால் தான், அவர்கள் உய்வு அடைய முடிந்தது என்பதை அவர்கள் திருவாக்குகளே நமக்கு விளக்கிக் காட்டும் என்பதில் தடையும் உண்டாமோ ?

கீழ்ப்பறவை சாதிகளும் வேட்டமுற்றுப், பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும் அளவில் திருவாசகத்தேனை அருளிய வாதவூரடிகளே தன்னை "நாயேன்" எனவும், "கள்வன்" எனவும், "பித்தன்," எனவும், "பொய்யன்," எனவும், தான் இயற்றிய பாசுரங்களிலே கூறிக்கொள்வதைக் காணலாம். பல்லோர் தங்களைப் பற்றி இழிவு செய்துப் பாட்டிசைத்துக் கொள்வதைக் காட்டிலும் விஞ்சியே அடிகள் தன்னை இகழ்ச்சி செய்து கொள்கிறார். அங்ஙனம் இகழ்ச்சி செய்துகொள்ளும் சில இடங்களைக் காண்போம். அவைகள் எந்த அளவிற்குப் பட்டினத்தடிகளுக்கு அரண் செய்கின்றன என்பதைச் சிந்தனை செய்வோம்.

"நாயினேனை நலமலி தில்லையுட்
கோலமார்தரு பொது வினில் வருகென"

"ஒன்ருய் முளைத் தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்ருக வைத்தென்னை நாய்சிவிகையேற்றுவித்த,"

"வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னுதே"
கன்னஞ்சுருக்கிக் கருணையினுல் ஆண்டுகொண்ட,"

"நாயேனை தன்னடிகள் பாடுவித்த நாயகனை,
பேயேன துள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை."

"நான் தனக் கன்பின்மை நானுந்தானும் அறிவோம்"

இதுபோன்று சொல்லொணு இடங்களில் தன் குணங்களை இழிவாய் பேசி, அடிகள் செல்வதைக் காணலாம். விரிவஞ்சி அவைகளை எழுதாதுவிடுகிறேன்.

வாதவூரடிகள் செய்யுள் ஒன்றில் "யானே பொய்; என் நெஞ்சும் அதைவிடப் பொய்; என் அன்போ இது எல்லாம் காட்டிலும் பெரும்பொய்' என்று தன் குணங்களைக் குறித்து விண்ணப்பம் இடுகிருர் இறைவன் இன் தாள்களுக்கு. இங்ஙனமே பற்பல மெய்ஞ்ஞானப் பெரியோர்களும் கணக்கற்று இகழ்ந்து கொண்டே போகிருர்களே என்ற ஐயம் நமக்கு எழாதிருக்க முடியாது. தன்னைப் பற்றி ஒருவன் இகழும் பொழுது, வருத்தம் ஏற்படுகிறது. வருத்தத்தின் விளைவால் அழுகையும் பிறக்கிறது. இது சாதாரண நம் போன்ருர் நிலையில் காண்பது. மெய்ஞ்ஞானிகள் தங்கள் கருணையற்ற குணங்களைத் தாங்களே எண்ணி, எண்ணி உருகுவதால்—அதனை மாற்ற வேண்டுமென்று இறைவனிடத்தில் முறையிடுங்கால், ஆனந்தப் பேறு அடையும் முகத்தால் அழ ஆரம்பிக்கிருர்கள். ஒரு தந்தையிடம், தனயன் தனக்கு உரிமை இருப்பதை மிகுதியாக எண்ணி, தனக்கு விருப்பமுள்ள ஒரு பொருளை எளிதில் பெற, அழுகையால் அன்ருே முயல்கிருன்? அங்ஙனே, இறைவன் என்ற தந்தையிடம் ஞானிகள் என்ற பிள்ளைகள், தாங்கள் வேண்டும், சிவாநந்தப் பேற்றை அழுதே பெறமுயன்றனர்; முயன்றும் பெற்றனர். இதனை நமக்கு வாதவூரர் வாக்கன்ருே வலியுறுத்துகிறது.

"யானேபொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனுல் வினையேன் அழுதாலுன்னைப் பெறலாமே

தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியேனுனை வந்துறுமாறே!

என்ற செய்யுளில் "அழுகையால் உன்னைப்பெறலாம் இறைவா" என்ற குறிப்புப் பொருள் தெரிவதைக் காண்க. இப்பெரியார் இங்ஙனம் உருகித் தன்னை இகழ்ந்து பேசி இறைவனைப் பெற முயல்வதேபோல், பட்டினத்தடிகளும் தன்னைப் "பொல்லாதவன்—நெறி நில்லாதவன்" என்று கண்டபடியெல்லாம் இகழ்ச்சி செய்து பேசிக்கொள்கிறார். உள்ளம் உருகி, அதனால் வரும் அழுகையின் விளைவோ, அமுதெனவும், கரும்பின் தெளிவெனவும், நீக்கமற நிறைகின்ற பரம்பொருளை அடைவதற்கே என்பதைத் தெளிந்து காண்மின்!

மான்

[ஆரணி-முத்து. சு மாணிக்கவாசக முதலியார்]

தமிழில், மான் என்பது அருகி வழங்காது பயின்றுளது. மாள் என்பதும் பயின்றிலதாயினும் ஆட்சியிற் காணக்கிடக்கின்றது. பெருமான், கோமான், சேரமான், மலையமான், எம்மான், அம்மான், தம்மான், பெம்மான் என்பவையும் பிறவும் இங்குக் கருதற்பாலன. அம்மாள் என்பது வழக்கிற் பயின்றுளது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்து விளிமரபுரைக்கண், கங, கடு - ஆம் சூத்திரங்களாகிய

'அன் என் இறுதி ஆ ஆகும் மே'
'ஆன் என் இறுதி இயற்கையாகும்'

என்பவற்றின் உதாரணங்களாகச், 'சோழன் - சோழர்' 'சேரமான், மலையமான்' என்பனவும் உள.

'அயல் நெடிதாயின் இயற்கையாகும்' (உஅ) என்பதனுதாரணமாகக், 'கோமாள்' என்பதும் உளது. நச்சினார்க்கினியத்தில் 'ஏமாள்' என்றும் ஒன்றிருக்கின்றது.

இளம்பூரணத்துள் ‘ எம்மாள் ’ என்றுள்ளதால், நச்சினார்க்கினியம் ஆண்டு ஆராய்ந்து கோடற்பாற்று.

இத் தொல்காப்பியத்துரை யுதாரணங்களை நோக்கின், சோழன் என்பதில் அன் இறுதியும், ‘ சேரமான் ’ ‘ மலையமான் ’ என்பவற்றுள் ஆன் இறுதியும், ‘ கோமாள் ’ ‘ எம்மாள் ’ என்பவற்றுள் மாள் இறுதியும் உள்ளமை புலப்படும். சோழன் என்பதன் முதலும் அறியத்தக்கதே. அதில் ‘ அன் ’ இறுதிபோக, நின்றது முதலாதல் எவ்வாறு? அதைப் பின்னர்க் காணலாம். மான் மாள் என்பவற்றுள், முன்னதை ‘ ஆன் ’ என்றும் பின்னதை ‘ மாள் ’ என்றும் உரையாசிரியர் பலரும் குறித்தல் யாங்ஙனம் பொருந்தும்? அவற்றின் தொல்லுருவம் கருத்திற்படாத குற்றந்தானே மற்றென்றோ ஆராய்ந்து கொள்ளல் அறிவர்க்கழகு. எம் ஆராய்ச்சியை இங்குக் குறிக்கின்றோம். அறிஞர் மேலும் ஆராய்ந்து உண்மை கண்டுணர்த்துவரேல், உணர்ந்து போற்றக் கடவேம்.

‘ ஆண்மை யடுத்த மகனென் கிளவி ’
‘ பெண்மை யடுத்த மகளென் கிளவி ’
‘ முறைமை சுட்டா மகளு மகனும் ’
‘ பெண்மை யடுத்த மகனென் கிளவி ’
‘ மகடூஉ மருங்கிற் பால்திரி கிளவி ’
‘ மகடூஉ இயற்கை தொழில்வயி னான ’

என்னுந் தொல்காப்பியச் சூத்திரப் பகுதிகளை இங்கு நினைவிற்கொள்ளல் நன்று. இவற்றால், மகன் மகள் என்னும் இரண்டு பாலுணர்த்துதலும், முறைமை சுட்டலும், சுட்டாமையும், பெண்பாலுணர்த்தும்போது மகன் என்பது அதற்கேற்ற வினைகோடலும் விளங்கும்.

மகன் என்பதில் அன் ஈறும், மகள் என்பதில் அள் ஈறும் உள என்பர். ‘ னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் ’ ‘ ளஃகான் ஒற்றே மகடூஉ அறி சொல் ’ என்பவற்றுள் ‘ ஒற்றே சொல் ’ என்று ஐயுறவு தோன்றுதவாறு

கூறியுள்ளார். மாபியன் முதற்பாவில், இளமைப் பெயர் பலவற்றுள் 'மக' என்னும் ஒன்றுணர்த்தினர். மகன் மகள் என்பவை, அப்பெயரோடு, ஆடூஉவறி சொல் மகடூவறி சொல் என முற்கூறிய னகர ளகர வொற்றுக்கள் சேர்ந்து (மக+ன்=)மகன். (மக+ள்=) மகள் என்றாயின என்ன இடனுண்டு. இதனை,

> ' கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப ' (மாபியல் கந)
>
> ' மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
> அவையும் அன்ன அப்பா லான ' (ஷை. கச)

என்பவற்றை மட்டும் நோக்கி மறுத்தல் கூடும்.

> குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
> கிழவ அல்ல மக்கட் கண்ணே (ஷை. உங)

என்பதை நோக்கின் மறுத்தற்கில்லை.

> ' அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
> ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே ' (வினை. அ)

என்றதால், அன் ஆன் முதலியவற்றின் ஈறே, 'னஃகான் ஒற்றே', 'ளஃகான் ஒற்றே' எனச் சுருக்கிக் கூறப் பட்டனவாதலின், மக+ன், மக+ள் எனச் சேர்த்தல் பொருந்தாது எனலாம். ஆயின், அவன் அவள் என்றவற்றின் முன்னியைபாகிய (செய்த + அவன், செய்த+அவள்,) செய்தவன், செய்தவள் என்பன செய் தான் செய்தாள் என்றாகி வேற்றுமை யேற்றுவரும் பெயராதலறிக. ஆண்டுள்ள ஆனும் ஆளும் அவன் அவள் என்றவற்றின் மரூஉவேயாகும்.

மகன், செய்தவன், செய்தான் என்னும் மூவகைச் சொற்களினீற்று னகரவொற்று ஆடூஉ வறிசொல்லேயாகும்.

மகன், மகள் என்னும் உயர்திணை யொருமைப்பாற் பெயர்கட்கு ஏற்ப, ஆடவர் பன்மையும் பெண்டிர் பன்மையும் அவ்விருவர் பன்மையும் உணர்த்த நின்ற பெயர் மக்கள் என்பது. மக்கள் என்பது பொதுமை குறித்தலாற்றான்,

இந்நாளில், ஆண்மக்கள் பெண்மக்கள் என்று குறிப் பாராயினர். இம் மகன், மகள், மக்கள் என்னும் முப் பெயரும் முன்னர் அடைகொண்டு கோமகன், கோமகள், கோமக்கள், பெருமகன், பெருமகள், பெருமக்கள் முத லியனவாக வழங்கலாயின. சோன் மகன், மலைய மகன் என்பனவே சேரமான் மலையமான் எனமரூஉவாயின. வேளிர் மகன் என்பது வேளிர்மான், வேளிர்மான், வெளி மான் என்றாயிற்று. (புறம். 162) வேண்மாள் (372) என்பதும அறிக. கோமான் கோமாள் என்பவற்றை நோக்கின் அவ்வுண்மை எளிதிற் புலனாகும். பெருமகன், பெருமான், பெம்மான் என்று மரீஇயின. சேக்கிழார் பெருமானார்,

> " தந்தம் பெருமைக் களவாகிய சார்பி னிற்கும்
> எந்தம் பெருமக்களை யாவர் தடுக்க வல்லார் "

என்றருளியதிற் குறித்த பெருமக்களைக் கண்டு பேரின்புற லாம். பெருமகள், கோமகள் என்பவை முறையே பெரு மாள், கோமாள் என்று மருவி, மீண்டும் பெருமாட்டி கோமாட்டி என வழங்கலாயின. மகன் என்னும் ஆண்பாற் சொல்லுக்குரிய மகள் என்னும் பெண்பாற்சொல் மாள் எனத் திரிந்தது தமிழ்வழக்கு. அது மாட்டி எனத்திரிந்த தன்று. வழங்கலாயிற்று. அவ்வழக்கம் வடமொழித் தொடர்பால் ஆயிற்று. மாந், வாந், மத், வத், மதி, வதி என்பன புத்திமாந், குணவாந், ஸ்ரீமத், குணவத், ஸ்ரீமதி, பாக்கியவதி என ஈற்றில் நின்று வழங்குதல் வடமொழி வழக்கு. ஸ்ரீமாந் என்பது சீமான் என்று ஆண்பாலிலும் சீமாட்டி எனப் பெண்பாலிலும் வழங்கி வருகின்றன. அம் முறையைப் பெருமான் என்பதற்கும் சார்த்திப் பெரு மாட்டி என்றனர் மொழிநிலையறியும் விழிநிலை பெறாதார். மகனார், மகளார் என உயர்வு குறித்து வழங்குமாறே பெருமாட்டியார் என்றும் வழங்கினார். பெருமானார் என்ற வாறு பெருமாளார் என்றாரல்லர். பெருமான் சிவனையும் பெருமாள் எனத் திருமாலையும் வழங்கினர் முன்னோர்;

'அரியலாற்றேவியில்லை' என்னுஞ் சைவக் கொள்கையை யொட்டி அருணகிரிநாதர் முதலியோர் முருகப்பிரானையும் பிறரையும் பெருமாள் என்றனர். எனவே, அதனைப் பிற் காலத்தில், பெருமான் என்பதன் மரூஉ என்று கொண் டெழுதிவிட்டனர். பள்ளிச்சிறார்க்கென்று இலக்கணம் எழுதியவர் பலர் 'மான்' என்பதைப் பெயர் விகுதிகளுள் ஒன்றென எழுதினர். வடமன் என்பதிலுள்ள மன் என்பதும் (வடக்கு மகன் என்பதன் திரிபாதலின்) விகுதி யன்று. மாமன்—மாமி எனபவற்றிலுள்ள மன்னும் மிய்யும் விகுதிகள் என்றெழுதியவர்க்கு இவ்வுண்மை ஒவ்வாத தாகலாம்.

மகன் மகள் என்பன தொல்காப்பியர் கூறியவாறு முறைமை சுட்டாது வருதலை ஈண்டுணர்தல் நன்று. கோமகன் என்பதில் அரசற்கு மகனும் முறைமையைச் சுட்டும்.

"திருப்பழனப் பதிபுகுந்து, தங்குபெருங் காதலொடு தம் பெருமான் கழல்சார்ந்து, பொங்கியவன் புறவணங்கி முன்னின்று போற்றிசைப்பார்" (திருநாவுக்கரசு. உகo) என்றதில், சிவபெருமானை மகன் என்று குறித்துளது.

"எவர்க்கும் இவன்
தந்தையே யன்றித் தனையன்ஆ காதவன் காண்
அந்தமில்சீர்க் காரைக்கா லம்மைதனை—முந்தொருநாள்
தப்பா அருளால் தனக்கு+அம்மை என்றவன்காண்
அப்பா எனுமொழியும் அன்பினால்—துப்பார்
அயிலேர் மகன்மாட் டறிந்தவன் காண்"

என்றருளிய கவிதாசார்வபௌமர் திருவாக்கால், சிவபிரானை முறைமை சுட்டு மகனெனுஞ் சொல்லாற் குறிக்கலாகாமை தெளிவாகும்.

திருமகள், நாமகள், அலைமகள், கலைமகள், மலைமகள் என்பன முதலிய இடங்களிலும் முறைமை சுட்டியதாக் கொள்ளல் பொருந்துமோ? "திருமகள்—திருவாகிய மகள். ஸ்ரீதேவி. நிலமகள்—நிலமாகிய மகள். பூதேவி"

என இக்காலத்துரையாசிரியர்க்கு முற்காலத்துரையாசிரியர் பெருமையனைத்தும் வாய்ந்தும் தலைமையுற்றும் விளங்கிய பெரும்புலவர் எழுதியவற்றை இங்கு உணர்தல் வேண்டும். மகன் - தேவன். மகள் - தேவி. பெருமகன் - பெருந் தேவன் என்று பொருள் பயத்தலறிக. ஆள், மகள், அலி என்னும் மூன்றொடும் ' தூஉ ' என்பது சேர்ந்து, ஆடூஉ, மகடூ, அலிதூஉ என வழங்கின. அவ்வழக்கத்தால், மகன், மகள் என்னுஞ் சொற்களினீற்றில் ' தூஉ ' என்பது சேர்ந் தமையின்றி, மகன் என்பதன் மரூஉவாகிய ' மான் ' என்பதும் மகள் என்பதன் மரூஉவாகிய ' மாள் ' என்பதும் வேறு சொற்களினீற்றில் விகுதியாதலில்லை என்று தெளிந்து கொள்ளலாம். கோமகனார் கோமானார் பெருமகனார் பெரு மானார் கோமகளார் பெருமகளார் என்பவற்றில், மகனும் மகளும் நின்ற நிலையை அறிந்தால் அது புலப்படும்.

தொல்காப்பிய வுரைகளுள் (முற்குறித்த இடத்துள்) 'கோமாள்' என்பதன் நடுவெழுத்தை நெடிலாக்கொண்டே உதாரணமாகக் காட்டினமை பொருந்துமோ ? விளிமாபின் (உள+உஅ) ' எஞ்சிய இரண்டின் ' ' அயல் நெடிதாயின் ' என்றவற்றை நன்கு நோக்கின் அது பொருந்தாமை காண லாம்.

இக்கட்டுரைக் குறிப்பால் வெளிப்படுவது மகன், மகள் என்னும் பெயரின் மரூஉவாகிய மான், மாள் என்பவை, விகுதி எனக் காட்டப்பெறல் தமிழ்ச் சொல்லின் உண்மை யைக் காண்டற்குத் தடையாகும் என்பதே. முதலிரு குறி லுடையவை ஒரு நெடிலாக மருவுதலியல்பு. அகழம்-ஆழம், பொழுது - போழ்து, போது, தொகுப்பு - தோப்பு, துகள்- தூள், நிகளம் - நீளம், பகுத்தீடு - பாதீடு, புழுதி - பூதி, விழுதல் - வீழ்தல், விழைதல் - வீழ்தல், மகன் - மான், மகள் - மாள் என்னும் உண்மையை அறிக. சிறுவர் - சிறார். மகவர் - மகார் எனவரும் பிறிதோரியல்பையும் ஈண்டுணர்க. விரிவஞ்சி நிறுத்துகின்றேம்.

கவிஞர் கண்ட மலை

[அ. தா. ப. திருஞானசம்பந்தம், திருவண்ணாமலை]

ஒரு பெரிய கவிஞர் மாமலை யொன்றைக் கண்டார். அக்கவிஞரோ பெரும் புலமை வாய்ந்தவர். அவர் புலமை யாதென ஆராய்தல் முதற்கண் இன்றியமையாததாகும். அவர் புலமையோ, ஒன்றினை ஊன்றிப் படிக்குங்கால், படிக்கப்படுஞ் சொற்குழுவினின்று, உணரப்படும் பொருட் கண் உள்ளம் உறைத்து நிற்பச், சாந்தத்தின் வண்ணமாந் தன்மைத்தாகி, உயிர் அவ்விழுமிய பொருட் பயன்களை நுகர்தலும், அங்ஙனம் நுகர்ந்ததிற்குப் பின் வெளியுல கத்து மீண்டும் நினைவு கூர்தலும், முடிவு கட்டிய உண்மை களை கடை பிடித்தும், தங் குறிக்கோளாக ஒழுக்கயியலின் மேற்கோடலும் மேற்காட்டிய உறுப்புக்களோ டியைந்தும் உள்ள நிலையில் நின்றது. அதுமட்டுமன்றி அறிவென்ற பொருளைச் சுடர்விட்டொளிரச் செய்து, அச்சுடரின்கண் ணிருந்து, இதற்கு முன்னர் புலவரேறுகள் காணாதனவும், உலப்பிலா இன்ப விளைவிற்கு ஊற்று சுரக்கும் மணற்கேணி யொத்தும், அரிய பல நுண்மாண் நுழைபுலங் கொண்ட கருத்துக்களை அகக்கண்ணாற் கண்டு இன்புறுதலாகிய புலமை வாழ்க்கையை மேற்கொண்ட ஒரு பெரும் புலவர், மாபெருங் கவிஞர், ஓர் மலையைக் கண்டு, அதன் வண்ணத் தில் ஈடுபட்டுச் சமயச் சார்புள்ள கருத்துக்களை அதற்கு ஒப்புமை காட்டி, விளக்க வைத்துப் படிப்போரையும், கேட் போரையும், பேரானந்த வாரிதியில் படியும்படிச் செய் கிறார். இத்துணைச் சிறப்புடைய புலமை மிக்க கவிஞர் யார்? அவர் கண்ட மலை எது? என்ற கேள்வி மனத்திலே நின்று அறிய வற்புறுத்துமன்றோ! ஆம்! அவர்தான் துறை மங்கலம் - சிவப்பிரகாச சுவாமிகள். அவர் கண்ட மலைதான் அண்ணாமலை, சோணசைலம், அருணகிரி என்று அழைப்பர்.

உலகில் தோன்றிய அனைவரும் வாழ்கிறோம். புலமை நிரம்பிய கவிஞர்களும் வாழ்கிறார்கள். இருவர் வாழ்வும்

ஒரு வகையில் நிற்குமோ என்று சிந்தனைச் செய்தால், நிற்காது என்றே விடைவரும். ஏன்? கவிஞர்கள் கற்பனை உலகில் திளைத்து வாழ்வர். ஏனையோர் நடைமுறை யுலகில் வாழ்பவர். இத்தகைய வாழ்வுகளில் யார் வாழ்வு உயர்ந்தது? கவிஞர் வாழ்வே உயர்ந்ததன்றோ! கவிஞர் பல கருத்துக்களை எதிர்காலத்து மக்களை உய்விக்கத் தகுந்த அளவில் எண்ணுகிறார். அவர் எண்ணமெல்லாம், நோக்கமெல்லாம் மிக மிக உயர்ந்ததாக இருக்கும். ஒரு வேளை கவிஞர் வாழ்நாளில், அவர் கண்ட கருத்துக்களை, அக்கால மக்களுக்கு எடுத்து விளக்கினும், அன்னோர் கவிஞர் நிலையை எண்ணி, ஏளனம் செய்யினும் செய்வர். ஆனால் அதே கவிஞர் கருத்துகள், காலச் சக்கரச் சுழற்சியின் விளைவால் மக்களின் மனம் மாற்றமுறுந் தறுவாயில், எக்கருத்துக்களை எள்ளி ஏளனம் செய்து நகையாடினார்களோ, அவர்களே அக்கருத்துக்களைப் பொன்னே போன்று மதித்து, அக்கவிஞரையும் ஏற்றிப் போற்றுகிறார்கள். காரணம் வேறொன்றுமில்லை.

"எல்லோரும் இன்புற் றிருக்க வேண்டுவதே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்ற தாயுமானார் வாக்கிற்கேற்ப கவிஞன், எப்பொழுதும், எல்லோரும் இன்புற்று வாழும் நிலையை நோக்கியுள்ளான். ஆதலான், அவன் எண்ணங்கள் வெகுவாகத் தூய்மையோடு விளங்குவதால், அவ்வெண்ணங்களின் கூட்டுறவே செயலாகப் பரிணமம் செய்கிறது. அன்று, பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் தோன்றிய பெருநாவலர்—வள்ளுவர் பெருந்தகையார், கற்பனை யுலகில் கண்டாய்ந்து எழுதி வைத்தக் கருத்துக்கள், இன்றையப் போக்கிற்குப் பெரிதும் வேண்டப்படுவது மன்றி, பட்டி, தொட்டி முதல் பாராளும் மன்றம்வரை அலசிப் பார்க்கப்படுகின்றன. பல பொருள் நயங்களும், வாழ்க்கைப் பாதையைச் செம்மை செய்து வாழ வைக்கத் தகுந்த பல கருத்துக்கள் அவர் கற்பனைக்குத் தோன்றியதே அதற்குக் காரணம். உவமை இல்லாத பாக்களும், கற்பனையில் திளைக்காத கவிஞனும்

பயனில்லை என்பர் அறிஞர். மனதிற்கு மகிழ்வை அளிப்பது கற்பனையே. நினைவு உலகத்தில் நேரில் கண்டு, ஒரு பொருளை அனுபவித்து இன்பங் காண்டலைவிட, கற்பனையுலகில் ஆழ்ந்த சிந்தனையோடு அமர்ந்து நோக்கின், அது தருணம் அடையும் பயனையும், தெளிவையும், மகிழ்வையும் என்னென்பது. அகப்பொருட் டுறையில் உள்ள உவமைகளை, உதாரணத்திற்காகக் கற்பனையில் நின்று உற்று நோக்கினுல், மனம் எத்துணை இன்பத்தில் இலயிக்கும் என்பதைக் காண்க.

தெய்வச் செந்தமிழ் மணங்கமழும், பெரியபுராணத் திருச்செய்யுட்களை, அலைகடல் அமிழ்தெனத் தமிழகத்திற்கு அன்புப் பரிசிலென வழங்கிய சேக்கிழார் பெருமானுடைய உவமைகள், கற்பனைகள் சில கண்டு இன்புற்றுப் பின் சிவப்பிரகாசரிடம் செல்வோம். கோழை படாத பேழிச் செல்வம் மிக்க வேளாளப் பெருமக்கள் நிசம்பிய திருமுனைப்பாடி நாட்டின் வளப்பத்தைப் பேசவந்த அடிகளார்,

வாழைக்குலைகள் வளம்பொருந்தி நெடிதாயிருப்பதால், யானைத் துதிக்கை போன்றுமிருப்ப, செந்நெற் கதிர்கள் வளர்ந்து பொலிவுற்று, வளைந்திருப்பது குதிரை முகம் போன்றிருப்ப, பெரிய வண்டிகள் தேர்போன்றிருப்ப, உழவர்கள் முழக்கம் படைவீரர் ஆரவாரம் போன்றிருப்ப மருத நிலமானது, நால்வகைச் சேனைகள் ஒருங்கு சேர்ந்துள்ள இடத்தை யொத்திருந்தது என உருவகப் படுத்தி அழகுற அமைத்துக் கூறுகிறுர்.

நீர்வளம் மிக்க அத்திரு நாட்டில் ஏரிகள் பெருங்கடல் போலவும், அதனுட் புகுந்து நறும் பூக்களை மேயும் எருமைகள் கடலிற்படியும் மேகம் போன்றும், அவ்வெருமைகளின் மடிகளை முட்டுகின்ற வரால் மீன்கள் எருமைக் கன்றுகள் போன்று மிருப்பதாகவும், அவற்றைத் தமது கன்றுகளே யென்றெண்ணிய அவ்வெருமைகள் சொரிந்த பால் கரையெங்கும் அலையடிப்பதாகவும் ஆசிரியர் புனைந்து, கற்பனை செய்து, பாகயம் சிறக்கக் கூறுவது,

கற்றோர் மனத்தைக் களிப்பில் அமிழச் செய்யும் என்பதில் தடையில்லை. செய்யுட்களை புராணத்திற் காண்க.

இக்கட்டுரையிடையிலே சேக்கிழார் பெருமான் தோன்றிச் சிவப்பிரகாசருக்கு ஆதரவு காட்டியவண்ணமிருக்கிறார். சேக்கிழார் சுவாமிகளின் நயமும், கற்பனையும், சிலமும் சொல்லடுக்கும் சைவ உலகில் தோன்றி மிளிர்ந்த எந்தப் புலவருக்கும் வாய்க்கவில்லை எனலாம். ஆனால் இவரைப் பின்பற்றியே சைவ உலக மெய்யன்பர்கள் சென்றிருக்கிறார்கள். ஒரு பொருள்தான் சார்ந்ததின் வண்ணம் மாற்ற முறுகிறது என்ற உண்மைப்படி சேக்கிழார் பெருமான் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய புலவர் பல்லோரும், அவரை அணுகிப் பிடிப்பதுபோலத் தோன்றும். அங்ஙனம் சென்றவர்களில் சிவப்பிரகாசர் சில பகுதிகளை யொட்டி முதன்மையாகத் தோன்றுவர் எனலாம். சிவப்பிரகாசர் கற்பனைகளும், நயங்களும் எந்த வகையிலும் சேக்கிழார் பெருமானை விஞ்ச இயலாது. இருப்பினும், பாமரர்களும் படித்து, அதில் ஒரு சுவை காண, எளிமையில் நயங்கள் வைக்கும் பெற்றிச் சிவப்பிரகாசருக்கு அமைந்திருக்கிறது. அத்தகைய ஒரு பெரியவர்தான், கல் மலையை, பெரும் பாறைகள் அடர்ந்ததோர் கூட்டத்தை கற்பனையில் வைத்து உவமைகள் அமைத்துக்காட்டுவது நம்மைக் களிபேருவகை அடையச் செய்யுமன்றோ!

நகரச் சிறப்பு: பாசப் பிணிப்பு நீங்கத் தெரிந்து பிறந்தால் முத்தியைக் கொடுக்கும் தலம் திருவாரூர். துன்பம் அடையாது சென்று சேர்ந்து கண்டால் முத்தியைக் கொடுக்கும் தலம் சிதம்பரம். களிப்புடன் போய்த் தங்கியிருந்து இறந்தகாலத்து முத்தியைத தரும் தலம் காசியம்பதியாகும். ஆனால் நினைத்த இடத்தில் இருந்து எண்ணியாங்கு முத்தியை நல்கும் தலம் திருவண்ணாமலையாகும். இந்நகரின்கண் எழுந்தருளியுள்ள மலையைத்தான் அண்ணாமலை என்பர். இறைவனே மலை வடிவனாகத் தோன்றியருளா நிற்கிறார் என்பதே ஸ்தல ஐதிகம். அம்மலையைத்தான் சுவாமிகள் கற்பனை நயம் தோன்ற, அறிஞர் மெச்சி அக

யகிழவும், பாமரர் படித்துப் பரவசம் அடையும் வண்ணமும் எழுதியுள்ளார்கள். அவைகளைக் காண்போம்.

க்ற்பனை நயங்கள்

அன்னம் தாமரையில் வசிக்குமென்பர். இனி சந்திரன் மலையின் தீபத்தை நோக்கிப் பொருந்துங் காட்சி அன்னமொத்த தென்கிறார் கவிஞர். அச்சந்திரன் பொருந்த கார்த்திகைத் தீபம் விசாலம் பொருந்திய சிகரத்தில் விளங்க வளர்ந்தோங்குகின்ற சோணசைலனே

மடலவிழ் மரைமாட் டெகினென வருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடியிலங்க வளர்ந் தெழுஞ்சோண
சைலனே கைலை நாயகனே.

2. கருமையாகிய நீரை உமிழ்கின்ற குளிர்ச்சி பொருந்திய கன்னத்தையும், பனைமரத்தைப் போன்ற கையையும் உடைய யானையின் தோலாகியச் சட்டையை ஒக்க, சமுத்திரத்தைச் சாப்பிட்டு எழுகின்ற கரியமுகில் படிகின்ற சோண சைலனே.

கருங்கட முமிழு மீர்ங்கவுட் பனைக்கைக்
கரியுரிக் கஞ்சுகங் கடுப்பத்
தரங்க முண்டெழுகார் முகில்பயில் சோண
சைலனே கைலை நாயகனே.

3. பக்கத்தில் யானையினது தந்தம் இளமை தங்கிய திங்களை ஒப்ப, மிகுந்த பிரகாசமுள்ள அழகிய பச்சைக் கொடிகளானவை விரிந்த அவிர்சடை போலப் படர்ந்து இருந்து விளங்கும் சோணசைலனே.

புடையி னிற்கரிக் கோடிளம் பிறைபுரையப்
பொங்கு சோதியங் கொடி விரித்த
சடையெனப் படர்ந்து கிடந்தொளிர் சோண
சைலனே கைலை நாயகனே.

4. வளப்பமுடைய வருணன் கடலாகிய குடத்திலிருந்து நவரத்தினங்களைப் பெய்கின்ற மேகமாகிய கலசத்

திஞல் மொண்டு, குளிர்ச்சி பொருந்திய நீரை அபிடேகம் செய்ய ஆடியருளப் பெறும் சோணசைலனே.

வண்புனல் வேந்தஞர் கலிக்கு டத்து
மணிமுகிற் கலயத்தின் முகந்து
தண்புன லாட்ட வாடுறுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

5. தொடர்ந்து வலம் வருகின்ற மாந்தர்கள் வாசுகி யாகிய நாணைப்போலவும், அதற்கு இடையில் காட்சி யளிக்கும் மலை, அன்று திருப்பாற்கடல் கடைய உதவிய மந்திர மலை யொத்தும், கடையுங் காலை கடலில் எழுகின்ற ஒலி மக்கள் எல்லோரும் பேசி வலம் வருவதை யொத்தும், விளங்குகிறது என உருவகம் செய்கிருர் கவிஞர்.

வலம்புரி மனிதர் கடலென வொலித்து
வளைவுற நடுவண் மந்தரம் போற்
நலம்புரி தவத்தினின் ருளிர் சோண
சைலனே கைலை நாயகனே.

6. பொருந்திய சக்ரவாளகிரி ஆலயத்தின் மதிலாகவும், விளங்குகின்ற ஆகாயமே மேலே பாரப்புகின்ற பாவு கல்லாகவும் பொருந்தியிருக்கின்ற கோயிலில் இலிங்கமாக விளங்கும் சோணசைலனே.

வருளா மண்டச் சுவர்மதின் மிசைப்பா
விளங்குறு மண்ட கோளகையாய்ச்
சாருமா லயத்தினி லிங்கமாஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

7. மிக்கக் கீர்த்தி பொருந்திய பொலிவுள்ள சீகாழியிலுள்ள திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு, வெள்ளிய முத்துப் பந்தலைக் கொடுத்து அகன்ற ஆகாயத்தில் விளங்குகின்ற விண்மீன்கள் என்னும் முத்துக்கள் பதித்தப் பந்தலின்கீழ் வாழ்கின்ற சோணசைலனே.

முயங்குமா புகழ்பூம் புகலி யந்தணர்க்கு
முத்துவெண் பந்தரீந்தகல் வான்

நயங்குமீன் முத்துப் பந்தர்வாழ் சோண
சைலனே கைலை நாயகனே

8. வாழ்கின்ற பிள்ளையைப் பார்த்து மனம் உருகுகின்ற தாயின் முலைப்பாலானது வழிந்து ஒழுகுவது போல, அடியார்கள் வணங்கி எழ அருவி நீரானது ஒழுகுகின்ற சோண சைலனே.

வாழ்ந்திடு மகக்கண்(டு) உருகுதாய் முலைப்பால்
வழிந்தொ ழுகுதலென வடியார்
தாழ்ந்தெழு வருவி யொழுகுறுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

9. குகையினிடத்து மேகமானது வர, அதைக் கண்டு யானையானது, சமீபத்தில் வந்தது என்று, விரைவாக எழுந்து சஞ்சரிக்கின்ற சிங்கம் ஒளித்துக் கொண்டிருந்து நாணமடைந்து நிற்கும் சோணசைலனே.

கருமருங் களிர்த்ததென முழை வாயிற்
கார்வர விரைந்தெழுந் துகள்கே
சரிமறைந் திருந்து நாணுறுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

10. திருமாலானவர் ஒரு யோசனை தூரத்தில் இருந்து வணங்கப் பெற்ற கைலை மலைக்கு, நைவேத்தியம் செய்வதற்காக சேர்த்து வைத்திருக்கின்ற நெல்சாதம் என்று சொல்லும்படி விளங்கும் சோணசைலனே.

மாலி யோசனையின் வணங்குறுங் கைலை
மலைநி வேதித்திடக் குவித்த
சாலி யோதன மென்றிடத்திகழ் சோண
சைலனே கைலை நாயகனே.

11. மழையைச் சொரிகின்ற மேகங்கள் வந்து தாழ்ந்து ஆகாயத்தில் படர்கின்ற நிறைந்த புகையைப் போல எழுந்து இது அக்கினி மலைதான் என்ற உண்மை விளங்க நின்றிடும் சோணசைலனே.

மழைமுகில் வந்து தவழ்ந்து விண்படரு
மலிதரு புகையென வெழுந்து

தழலுறு வுண்மை விளங்குறுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

12. குகையாகிய வீட்டில் இருக்கும் கவரிமான்கள் கீழே விழ, மேகமானது மேலே தங்குதல், பிரமனாகிய வெண்மை நிறம் பொருந்திய அன்னம் கீழே தேடுவதை யொத்தும், முகில் வண்ணனாகிய திருமால் - கேழல் - மாறு பட்டுத் திருவடியையும், முடியையும் தேடுவதற்கு ஒத் திருக்கப் பெறும் சோணசைலனே,

வீடுறுங் கவர்கீழ் விழவுறல்கார்
மிசையனம் பன்றி தாமாறித்
தாடலை துருவ வடைதனோர் சோண
சைலனே கைலை நாயகனே.

13. மொய்த்துக் கொண்டிருக்கிற மேகத்தைப் பார்த் துச் சிங்கம் யானை வந்தது என்னும் முழக்கமும் தகுதி யுடையப் பெரியோர்கள் அரகவி என்று சொல்லும் ஒலி யும் எதிரொலியாக எழுகின்ற சோணசைலனே.

மொய்க்குறு முகில் கண்டரிகரி யென்னு
முழக்கமு மரகர வென்னுந்
தக்கவர் முழக்கமு மெதிரெழுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

14. வலிமையுள்ள யானைகள் தம்முடைய பருத்தத் துதிக்கையைத் தலையின்மேல் தூக்க அதைக் கண்டு மணிகள் பதித்தத் தேரை உடைய சூரியன் குகையிலுள்ள கரியப் பாம்பு என்று பயந்து மனத்தில் மயங்கி அப்பாற் செல்லப்பெற்ற சோணசைலனே.

மூரணிபம் பரூஉக்கை தலைமிசை எடுப்ப
முழைக்கரும் பாம்பென மணித்தேர்த்
தாணியுள் வெருவி யகன்றிடுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

15. கார்த்திகைதீபத் திருநாள் அன்று, திரள் திர ளாக மக்கள் வலம் வருகிறார்கள். அக்கூட்டத்தின் ஈட் டத்தைத் தெரிவிக்கும் கவிஞர் கற்பனையைக் காண்பாம்.

வாசனைப் பொருள்களை யணியும் பெண்களுடைய கால் சிலம்போடு, வாலிபர்களுடைய நீண்ட வீரக்கழல்கள் மாட்டிக்கொள்ள வலம் வந்தனர். (நெருக்கமான ஓர் இடத்தில் வேகமாய்ச் செல்ல முடியாமல், மெல்ல மெல்ல கால்களை எடுத்து வைத்தல்போல்) நீங்குகின்ற சமயத்தில் தெரிந்து நாணம் அடைப்பெற்ற சோணசைலனே.

மணந்திமிர் மகளிர் சிலம்பொடு மைந்தர்
வார்கழ றுவக்கிட வலம் போய்த்
தணந்திடும் மமையத் தறிந்துகாண் சோண
சைலனே கைலை நாயகனே.

16. வாவுகின்ற மான்மகள் பொருந்தியிருக்கின்ற உலகத்தில் சிகரங்களையுடைய மலைகளைப் போலல்லாமல், உண்ணுமுலையாகிய பல தாமரைகள் பொருந்தி யிருக்கின்ற மானுக்குள் வாழ்கின்ற சோணசைலனே.

வாமரை பொருந்து முலகுள குவட்டு
மலைகள் போலாது ணுமுலையாங்
தாமரை பொருந்து மானுள்வாழ் சோண
சைலனே கைலை நாயகனே.

பல கமலங்கள் பூண்ட உண்ணுமலை என்ற நயத்தைப் பின்வரும் பாவில் காண்க.

திருமுகங் கமலமிணை விழிகமலஞ்
செய்யாய் கமலநித் திலந்தாழ்
வருமுலை கமலந் துணைக்கரங் கமல
வலம்புரி யுந்தி பொற்கமலம்
பெருகிய வல்குன் மணித்தடங் கமலம்
படிநடைத் தாள்களும் கமல
முருவ வெட்கவ் வாருதலின்றே
யுயர்ந்து பூவினுட் கமலம்

—தணிகைப்புராணம் - களவுப்படலம் 43

17. மிகுந்த குங்கலிய கலசத்தில் உள் அமைந்த அக்கினியில் இருந்து எழும் புகையைப்போல தாமரைப் பூவின் அகவிதழில் தங்குகின்ற வண்டுகள் எழுகின்ற

பொலிவுள்ள தடாகங்கள் நெருங்கப்பெற்ற சோண சைலனே.

பொங்கு குங்கலியக் கலப வாரழலிற்
புகையெனச் சரோருக வல்லி
தங்கு வண்டெழும் பூம்பொய்கைசூழ் சோண
சைலனே கைலை நாயகனே

18. வளர்ந்தோங்கிய மூங்கிலின் உச்சியின்மேல் மலர்களில் விழுந்து கிண்டுகின்ற வண்டுகள் கட்டிய தேன்கூடு பொருந்தியது, அடியார்கள் ஏந்திய ஆலவட்டம் நிகர்த்த உபசாரக் கருவியை ஒத்திருக்கப் பெற்ற சோணசைலனே.

ஓங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்ந்
துபுமளி புரியிருள் மருவித்
தாங்கிய வால வட்டநேர் சோண
சைலனே கைலை நாயகனே.

சிவப்பிரகாசரின் ஒரு சில முக்கியமான பெரிய கற்பனை நயங்களைக் கண்டோம். அவர்தம் நயங்களின் தன்மையை விரித்துச் செல்லின் பெருகும். எனவே விரிவஞ்சி விட்டு வைக்கிறேன்.

ஓர் அறிவு நூற்புலவர், திரியாத அடக்கத்தை மலைக்கு ஒப்பிடுகிறார். அவர் யார் ? அவர்தான் செந்நாப் போதார். அதைச் சற்றுக் காண்பாம். இல்வாழ்க்கைக்கு விதித்த விதியினின்றும் மாறுபட்ட தீய வழிச் செல்லாமல் ஒருவன் அடங்குவானானால் அவனுடைய உயர்ச்சி மலையின் உயர்ச்சியைப் பார்க்கினும் பெரியது என்கிறார் பெரும்புலவர். இப்புலவர் கண்ட மலையையும் அதனைக்கொண்டு விளக்க வைத்த அடக்கத்தின் நீர்மையும் கண்டு, பொருள் நயத்தை ஆய்ந்து இன்புறுக.

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது. —குறள்

புலமை ததும்பிய கவிஞர் பெருமக்கள் கண்களுக்குத் தோன்றும் பொருள்கள் எத்துணைச் சிறப்படைகின்

றன என்பதற்கு இன்னும் தெளிபொருள் விளக்கம் வேண்டுங்கொல்? சாதாரண மானிடர் கண்களும் அவர் கண்களும் ஒன்ருகுமோ? காரிகை கற்றக் கவிஞராயிருந் தும், பெரும் புலமையில்லாக் கவிஞரும் கவிஞராமோ? புலமை யுடையோர் கண்களே கண்கள்; ஏனையோர் கண்களெல்லாம் புண்கண்கள் தானே?

'தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை'

வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் B. A. (Hons.) B. O. L.,

(மலர் 23, இதழ் 6, பக்கம் 255இன் தொடர்ச்சி)

ஆகம வரலாறு

இனி ஆகமங்களிலே கூறப்படும் சாதிப்பிரிவு ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதா என்பதை ஆராயுமுன் சைவாகமங் களைப் பற்றிய சில வரலாறுகளை யறிதல் பொருத்த முடைத்து. சைவ ஆகமங்கள் தமிழ் நாட்டிலேதான் தோன்றின. தென்னுடைய சிவனுல் அவனடியார்க் குணர்த்தப்பட்டன. நாவுக்கரசர் கூறிய 'குறிகளும் அடை யாளமும், கோயில் நெறிகளும், அவர் நின்றதோர் நேர்மை யும்' எனும் இவற்றைப்பற்றிக்கூறின. இந்த ஆகமங்கள் யாவும் இப்பொழுது கிடைக்கவில்லை. இப்பொழுது இவற் றின் பெயர் கொண்டு வழங்குவனவற்றிலே பெரும்பகுதி இடைச் செருகல்களாகும். பன்னிரண்டாம் நூற்றுண்டிலே வாழ்ந்த பசவதேவரையும் அவருடைய சீடர்களையும் பற்றிய வரலாறுகள் பரமேசுவர ஆகமத்திலும் வாதுள ஆகமத்தி லும் காணப்படுகின்றனவெனின் இவற்றின் பழமையையும் தூய்மையையும் பற்றி ஆராயவேண்டுமா?

இடைக்காலத்திலே இருந்த சோழ அரசர்கள் தேவாரங்களைக் கோயில்களிலே பாடுவதற்கு ஓதுவார்களை நியமித்தார்கள். தேவாரங்கள் பாடுவதைப்பற்றி ஆகமங்கள் ஒன்றும் கூறுவிடில் ஆகமங்களின் பிரமாணத்துக்குக் குறைவு வந்துவிடுமென்று சில பூசாரிகள் எண்ணினார்கள். ஞான சம்பந்தரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும் பூசை முடிவிலே தேவாரம் ஓதுதலையும் ஆகமங்களுள் புகுத்திவிட்டார்கள். இப்பொழுது திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புகழ் முதலியவற்றை நாம் கோயில்களில் பாடுகின்றோம். இதற்கு எந்த ஆகமத்திலே பிரமாணமுண்டு ?

குகையிடி கலகம்

இராசராசன், குலோத்துங்கன் முதலிய சோழ அரசர்கள் வடநாட்டிலிருந்து பல பிராமணர்களை அழைத்துத் தமிழ்நாட்டில் இருத்தினார்கள். ஆலயங்களிலே இருத்துதற்கென்றே இராசேந்திரன் எண்ணாயிரம் பிராமணர்களை வடநாட்டிலிருந்து கொண்டு வந்தான். இந்தப் பிராமணர்களுக்கு அக்காலத்தில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. இவர்கள் தாம் விரும்பியபடி கோயில்களிலே இருந்த ஒழுங்குகளை மாற்றிப் பல புதிய ஒழுங்குகளை ஏற்படுத்தினார்களெனின், அவ்வொழுங்குகளையெல்லாம் ஆகமங்களிற் புகுத்தாமலிருப்பார்களா ? மூன்றும் குலோத்துங்கனுடைய ஆட்சிக் காலத்திலிருந்த சுவாமி தேவர் என்னும் மடாதிபதி திருக்கடவூர்க் கோயிலில் அவ்வேந்தன் விதித்திருந்த ஒழுங்குகளைத் தாம் விரும்பியபடி மாற்றி அமைத்தார் என்பதையும் அதற்கு அரசன் சம்மதம் அளித்தானென்பதையும் ஒரு சாசனம் கூறுகிறது.

இவ்வடதேசப் பிராமணரின் செல்வாக்கைத் தமிழ் நாட்டிலிருந்த துறவிகளும் சமயப் பெரியார்களும் எதிர்த்தனர். தமிழ் நாட்டுச் சமயத் துறவிகள் குகைகளிலும் வாழ்ந்து வந்தனர். அக்குகைகள் திருமுறைத் தேவாரச்

செல்வன் குகை, திருத்தொண்டத் தொகையான் குகை எனவும் பெயர் பெற்றுள்ளன. இப்பெயர்களே அக்காலத்தில் தேவாரம் முதலிய திருமுறைகள் பெற்றிருந்த சிறப்பைக் குறிக்கின்றன. இந்தத் தமிழ்நாட்டுத் தேசிகர்களுடைய பெருமையும் தமிழ் வேதங்களுக்கு அவர்கள் அளித்த மதிப்பும் வடநாட்டிலிருந்து தென்னுட்டில் வந்தவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கலாம். இதனுலேதான் அக்காலத்தில் குகையிடி கலகம் தோன்றியது போலும். இக்கலகத்தைப்பற்றி வி. ரா. இராமச்சந்திர தீக்ஷிதர் எழுதியிருப்பதைப் பாருங்கள்.

" முதல் இராஜராஜன் இராஜேந்திரன் முதலிய சோழ வேந்தர்க்கு ராச குருக்களாய் இருந்தவர்கள் இலாடம், காசி, காசுமீரம் முதலிய வடநாடுகளிலிருந்து அவரால் வரவழைகப்பட்டவர்கள். இன்னோர் கோளகிமடம், லக்ஷாத்யப மடம், பிக்ஷாமடம் முதலிய சைவாதீனங்களின் தலைவர்களாய் அரசாங்கத்தின் மிக்க செல்வாக்குப்பெற்று விளங்கினர். நம் சோழன் காலத்தில் ராச குருவாயிருந்தவர் இலாட தேசத்தவரே. இவனது ஆட்சியிலும் அவ்வாசாரியர்களின் செல்வாக்கு அதிகமே. மேற்கூறிய குகை மடங்களில் வாழ்ந்த துறவிகள் தங்கள் ஞான சீலங்களாலும் உபதேசங்களாலும் நாட்டு மக்களால் நன்கு மதிக்கப்பட்டுப் பிரபலம்பெற்று வந்ததைக்கண்டு பொறுத இவ்வட தேசத்துக் குருமார்களால் இக்கலகம் ஏற்பட்டதோ என்று ஐயம் நிகழ்கின்றது."

இடைச் சேருகல்கள்

நூல்களிலே உள்ள பாடல்களையும் உரைகளையும் சுய நலவாதிகள், தாம் விரும்பியபடி மாற்றியும் குறைத்தும் புதியன பலவற்றைப் புகுத்தியும் அவற்றைத் தங் கருத்துக்கு ஆதாரங்களாக்குவது பண்டுதொட்டு நடந்து வருகின்றது. இதனை மறுக்க முடியாத சில வைதீகர்கள் " இறந்த நூலாராய்ச்சி, கட்டுக்கதை, பொருந்தாக் கூற்று " என்று பற்பலகூறித் தம் தோல்வியினைப் பெருக்குகின்றனர்.

இவர்கள், “நாவலரவர்கள் அச்சிட்ட நூல்களுள் பாரதத்தை நாம் மிகவும் மெச்சிக்கொள்ளவேண்டும். சென்னையில் வீராசாமிச் செட்டியார் மாணுக்கர் இராசகோபாலபிள்ளை என்பவர் வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தை முழுதும் மாற்றி அச்சிடவாரம்பித்தார். அதனை அறிந்த இவர் வில்லிபுத்தூராழ்வார் பாடியவாறே அப்பாரதத்தை அச்சிட்டார். இவருடைய பதிப்பு வாராதிருந்தாற் பாரதங் கெட்டேபோய்விடும்” எனும் ஆறுமுகநாவலர் சரித்திரப் பகுதியினை அறியார்களா? கம்பர் யார் எனும் நூலில், கம்பர் கவிக்கு வந்தவினை என்பது பற்றி டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதியிருப்பவற்றைப் படித்தும்பாருங்கள். “கம்பராமாயணத்துக்குள் வேறு செய்யுள்களைப் புகுத்தி விட்டார்கள் என்பதும் அதுவும் வெகு காலத்துக்கு முன்னேயே புகுத்தி விட்டார்கள் என்பதும் இதோடு அறிவாளிகள் சிலருக்கு இந்த விஷயம் தெரிந்திருந்தது என்பதும் புலப்படுகிறது” என அவர் கூறியுளர். திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் மூவாயிரஞ் செய்யுள்கள் மாத்திரமே உள என்று பெரிய புராணமும் திருமந்திரச் செய்யுட்களுங் கூறுகின்றன. ஆனுல் இப்பொழுது வெளியிடப்பட்ட நூல்களில் மூவாயிரத்து அறுபத்தொன்பது செய்யுட்கள் காணப்படுகின்றன. இந்த வேறுபாட்டுக்குக் காரணம் யாது?

தமிழ் மாலை மறைந்ததேன்

சுந்தரர் காலம் முடியும் வரையும் புகழ்பெற்று விளங்கிய தேவாரங்களைப் பின்னர் சில காலமாகப் பெருமையிழந்து தொகையிற் குறைந்து கடைசியாகச் சிதம்பரத்திலேசேமிக்கப்பட்ட காரணம் யாது? சமயாசாரியர்களாலே பௌத்த சமண மதங்களின் வலி குறைக்கப்பட்ட பின்னரும் அவர்களுடைய திருமுறைகள் தம் வியாபகத்தை இழந்ததற்கும், மூலை முடுக்கிலே அவற்றை ஒழித்துவைத்ததற்குங் காரணம் யாது?

வகுப்புப்பிரிவை நிலைநாட்டுதற்குத் தேவாரங்கள் இடங் கொடுக்கவில்லை. வடமொழிதான் தேவ பாடை என்று

சொல்ல முடியாத நிலைமையை அவை ஏற்படுத்தி விட்டன. "முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்தும்தொண் டர் சகமலாற் கோவில் இல்லை" என்ற உண்மையை அவை வலியுறுத்தின. பொருளுணர்ந்து இசையுடன் யாவரும் பாடுதற்கேற்ற பத்திப் பாடல்களாக அவை இருந்தமையால் மக்கள் அவற்றைப் படித்தார்களே யன்றிப் பொருள் விளங் காத வடமொழிச் சுலோகங்களைப் போற்ற அவர்கள் விரும்ப வில்லை. இதற்கு "நல்லிசை ஞானசம்பந்தனும், நாவினுக் கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத் துகப்பானை" எனச்சுந்தர மூர்த்தி நாயனாரே சாட்சி கூறி யுளர். தேவாரங்கள் யாவும் மக்களை மலர்பறித்திட்டு வணங் குங்கள்; அர்ச்சனை செய்யுங்கள் என்று ஏவினவே அன்றிச் செய்வியுங்கள் என்று கூறவில்லை. சொல்லியபாட்டின் பொரு ளுணர்ந்து சொல்லுங்கள் என்று கூறினவன்றிப் பொருள் விளங்காத சுலோகங்களை 'முணுமுணுக்குமாறு, உரைக்க வில்லை.

சிவாகமங்களின் சிறப்பியல்புகள்

வேதங்களைப் பொதுநூலென்றும் ஆகமங்களைச் சிறப்பு நூலென்றுங் கூறி இரண்டினையும் தொடர்புபடுத் தியுளர் எனினும் வேதச் சிரங்களெனும் உபநிடதங்களே ஆகமங்களோடு சேர்த்துப் பேசத்தக்கன. ஆகமங்கள் கூறும் கோயில் வழிபாடு வேதங்களிலே காணப்படாதது. இலிங்க வழிபாடு செய்வோரை இருக்கு வேதப்பாடல்கள் பழிக்கின்றன. கோவிற் குருக்கள் சிராத்தத்திற்குறியவர் அல்லர் என்று மிருதிகள் கூறுகின்றன. பதி பாசு பாசம் எனும் முப்பொருளுண்மையும் வேதங்களிலே விதந்தோதப் பட்டிலது. வேதங்கள் வேள்விசெய்தலையும் அக்கினி இந் திரன் முதலிய கடவுளர்க்கு அவிப்பாகங் கொடுத்தலையும் பற்றியுங் கூறுகின்றன. சிறு தெய்வங்களுக்கெல்லாம் பிராணங்கட்டுவது வேத வழக்கு; தொண்டர் சீர்பரவுவது ஆகம வழி வந்த சிவநெறி வழக்கு. வேள்வி வேட்கின்ற வர்களுந் தவஞ்செய்கின்றவர்களும் கடவுளுக்கு மாறாகப்

பெருமையடைந்து குதித்து விழுவது வேதத்தைச் சேர்ந்த மார்க்கம் ; சரியை கிரியை முதலிய படிகளிலே நின்றவர்கள்—அன்பினாலே கடவுளைப் பிணைத்தவர்கள்—பெரியோர்கள் என்பது ஆகம வழக்கு. கோபத்தினாலே திரிசங்கு சுவர்க்கத்தைப் படைப்பது ஆகமநெறியைத் தழுவியதன்று; அன்பினாலே கோயிலினை மனத்திலே அமைத்து அரனை வழிபடுவது ஆகமநெறி. நினைத்தவாறே தெய்வங்களைப் படைத்துப் புராணம் வகுப்பது வேதத்தைத் தழுவினோர் செயல் ; "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" எனக் கூறுவது ஆகமத்தைத் தழுவினோர் செயல். பிறப்பினாலே உயர்வு தாழ்வு பாராட்டுவது வேதநீதி ; "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே" எனப் போற்றுவது ஆகம நீதி. ஆன்மார்த்தமாகவும் கோத்திரார்த்த யாகங்களை விதிப்பது வேதம்; மக்கள் யாவர்க்கும் பொதுவாகப் பூசை, விழா முதலியனவற்றை விதிப்பது ஆகமம். காமியப் பணிகளைப் பற்றிக் கூறுவது வேதம் ; நிஷ்காமியப் பணிகளை யுரைப்பது ஆகமம்.

அடியார் வழிபாடு

தென்னாடு கண்ட அடியார் வழிபாடு வடநாட்டுக்கே புதியது ; வேதத்திலே கூறப்படாதது. ஆகம நெறிநின்று முத்திபெற்ற அடியார்கள் தென்னாட்டிலேதான் தோன்றினார்கள். கடவுளிலும் அடியார் பெரியாரென்று போற்றுவதும், "மாலற நேய மலிந்தவர் வேடத்தை அரனெனத் தொழுவதும்" ஆகமத்தின் அடிப்படையான கொள்கைகளாகும். வேதத்தைப் போற்றும் சிலர் அடியார் வழிபாட்டை எவ்வாறு இகழ்ந்தார்கள் என்பதைப் பின்வரும் நாவலர் வாக்கு நன்கு காட்டும். "இக்காலத்து ஸ்மார்த்தப் பிராமணருள்ளே பலர் அவ்வறுபத்து மூன்று நாயன்மாரை வழிபடக் கூசுகின்றார்கள். அவர்களுடைய உற்சவங்களிலே வேத பாராயணஞ் செய்

யாது மறுக்கின்றார்கள். அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவு அதிபாதகம் ...சைவசமய தாபகர்களாய் சிவமாந்தன்மைப் பெரும் பேறுபெற்ற உண்மை நாயன்மார்களையும் அவர்கள் உலகமுய்யும் பொருட்டு அருளிச்செய்த தமிழ் வேத முதலியவற்றையும் நிந்திக்கும் ஸ்மார்த்தர்களை அச்சிவாகமங்கள் உண்மை நூல்களெனக் கொண்டு அவற்றின் வழி ஒழுகப் புகுந்த நீங்கள் யாவர்களாகக்கொண்டு ஒழுகல்வேண்டும்?' இந்த அடியார்களின் பெருமையைப்பற்றி ஆகமப் பொருளை இறைவன் உணர்த்த உணர்ந்த மணிவாசகர் கூறுவதைக் கேளுங்கள்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவு ளிருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே"

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகை மாத்திரமே அடியார் பெருமையை எடுத்துக் கூறப் போதுமான தன்றோ! மேலும் மாணிக்கவாசகர், வேதங்களினாலே தென்னாடுடைய சிவனை அறிதல் முடியாதென்பதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

"மறையீறு அறியா மறையோனே" எனவும், "அப் பெரு மறை தேடிய அரும்பொருள்" எனவும், "வேதங்கள் ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" எனவும், "வேத நான்கும் ஓலமிட்டு வணங்கும் நின்னை" எனவும், "மறையில் ஈறுமுன் தொடரொணாதநீ" எனவும் அடிகளார் அருளிச்செய்துளாராகையால் வேதங்களை ஆகமத்துக்கு நிகரானவை எனக் கூறுதல் அறிவுடைமையாகாது. "விண்ணியங்கு தேவர்களும் வேத நான்கும் விரைமலர் மேல் நான்முகனும் மாலுங் கூடி எண்ணரிய திருநாமம் உடையாய்" என்று அப்பர் கூறியதையும் நோக்குக. சகலாகம பண்டிதர் எனப் போற்றப்பட்ட அருணந்தி சிவனார்

கருத்தும் இதுவே என்பது, "மறையினல் அயனல் மாலால் மனத்தினுல் வாக்கால் மற்றும், குறைவிலா அருளினுலுங் கூறெணு தாகின்ற, இறைவனுர்" என்றும், "அருளினல் ஆகமத்தே அறியலாம்" என்று அவர் கூறியவற்றினுலே புலப்படுகின்றது.

சுருங்கக் கூறின் மக்களுக்குள்ளே உயர்வு தாழ்வு முதலியனவற்றைப் புகுத்தி அவற்றின் வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டெழுந்தவை வேத வழக்குகள். வேற்றுமையை ஒழித்து ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் எனுஞ் சமத்துவ சமரச சன்மார்க்கத்தைப் பரப்பத் தோன்றியவை ஆகமங்கள் எனலாம்.

(தொடரும்)

மதிப்புரை

சித்தாந்தப் பேராசிரியர் உயர் திரு. பா. கண்ணப்ப முதலியாரவர்கள் இயற்றிய திருவொற்றி வடிவுடை அம்மை அருள்வேட்டல் என்னும் இந்நூலை முற்றிலும் படித்து மகிழ்ந்தேன். இதனுடைய ஆசிரியர்க்கு இடக்கையில் உற்றதோர்நோய் களைதற்பொருட்டு அவர் வடிவுடையம்மையின் அருள் பெறவேண்டிப் பாடிய பனுவல் இது. இது 101 செய்யுளைக் கொண்டிலகுவது. ஒற்றியூர் அம்மையை ஒவ்வொரு பாடலினும் விளித்திருக்கும் முறைமை நிரம்ப அழகியது. சத்தியின் உருவம், அருவம், உருவருவம், அதீதம் என்னும் நான்கு நிலைகளும், சக்தி, சிவத்தோடும், உயிர்களோடும், உலகோடும், கொண்டுள்ள தொடர்பும் ஆங்காங்கு அழகுறக் குறிக்கப்பெற்றுள. சித்தாந்தக் கருத்துக்கள் மற்றும் பலவும், பண்டு அம்மை தன் அடியவர்க்கருள் செய்த வண்ணங்களும், அவ்வடியவர் அருளிய அநுபூதி மொழிகளும் நூலின் பல பகுதிகளில் விரவி வருகின்றன. இந்நூலைப்பாடுமாறு இதனுசிரியரைத் தூண்

டிய மூன்று முனிவர்கள் குறிப்புப் பெயராளவில் எட்டுப் பாடல்களில் சுட்டப்பெற்றுள்ளனர். ஆசிரியர் தம் உடற் குற்றபிணி நீங்க ஒரு பாட்டிலும், உயிர்க்குற்ற பிணி நீங்கி உயர்வற உயர் நலமெய்தப் பல பாட்டிலும் வேண்டியுள்ளார். இந்நூலின் தெளிதீந்தமிழென்னும் திருவளர் யாற்றின் ஓட்டத்தில் விழுமிய கருத்துக்களாம் விலையிலா நண் மணிகள் நனி விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக 7, 36, 59, 65, 69, 72, 81, 89, 90, 98 - ம் பாட்டுக்களைக் காண லாம். கன்னித் தண்டமிழில் கவிஞர்பாடல் பாடுவாரும், செந்தமிழ்த்திறம் வல்லார் பாடியதை உலகங்காண உலவச் செய்து புலவர்களைப்பேணி மகிழும் பண்புடைய தமிழ்ச் செல்வர்களும் இன்றும் உளராதல் கண்டு உவகை பெரிது முறுகின்றேன். ஞானமும் பத்தியும் நயமுறச் செறிந்த இந்நறுநூலை யாத்தமைக்கு, எனது நன்மதிப்பிற்குரிய ஆசிரிய நண்பரைப் பெரிதும் போற்றுகின்றேன்.

சாத்திரம் விரவிய இத்தோத்திரப்பனுவலின் ஈற்றுச் செய்யுளில் இதனுசிரியர், "உருவளர் தமிழும், சிவநெறியும், உண்மைச்சாத்திரம் ஈரேழும், மருவளர் தமிழின் மாநிலமும் மங்கலச் செந்தமிழ்த் திருமுறையும், பெருவள நலனுடன் வாழ்ந்திட நீ பேரருள் செய்யாய் பெண்ணமுதே" என்று அலகில் அண்டங்களையும் எண்ணிறந்த சராசரங்களையும் ஈன்று புரப்பாளை வேண்டுகின்றார். வேண்டுவார் வேண்டு வதே ஈவாளாம் விமல அன்னை அங்கனமே நமக்கு அருள் புரிவாளாக.

அண்ணுமலைநகர் 12 - 2 1951 } ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T, (Registrar, Annamalai University) சைவசித்தாந்த மகாசமாஜத் தலைவர்.

பெரியபுராண வகுப்பு ஆரம்ப விழா


சைவ சித்தாந்த கழகம், விருதுநகர்

18-2-51 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கழகத்து ஆதரவில் பெரியபுராண வகுப்பு ஆரம்பவிழா இனிது நடைபெற்றது. கழகத்தலைவர் N. குருசாமி பிள்ளை பங்கீடு அலுவலகர், விருதை, வந்திருந்த பெரியார்களுக்கு வரவேற்புக் கூறினர். நகர முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் உயர் திரு. ராமலிங்கம் B. A., B. L. அவர்கள் விழாவைத் தொடக்கி வைத்தார்கள். சாத்தூர் வழக்கறிஞர் உயர் திரு. T. S. கந்தசாமி முதலியார் M. A. அவர்கள் சேக்கிழாரின் சரிதத்தை நவீன ஆராய்ச்சியுடன் எடுத்தோதி கடவுள் வாழ்த்துக்கு வியாக்கியானத்துடன் பொருள்கூறி பெரியபுராண வகுப்பை ஆரம்பித்து விழாவை இனிது முடித்தார்கள். காரியதரிசி ப. பொன்னம்பலம் M. A. வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

குறிப்பு :—உயர்திரு. T. S. கந்தசாமி முதலியார் அவர்களால் பெரியபுராண வகுப்பு ஒவ்வொரு ஞாயிறுதோறும் கழகக் கட்டிடத்தில் தொடர்ந்து நடைபெறும்.

பாராட்டுக் கூட்டம்

4-3-51 ஞாயிறுமாலை 5-மணிக்கு திருச்சிக் கோட்டை-காட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்க சார்பில் கோட்டையூர் டாக்டர் அழகப்பா அண்ணாமலை, M.D.H., பத்மாவதி தம்பதிகட்குப் பாராட்டுக் கூட்டம் ஒன்று உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் நடந்தது.



சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜ 45-வது ஆண்டு நிறைவு விழா—இராமநாதபுரம்

உ

குருபாதம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

45-வது ஆண்டு நிறைவு விழா, இராமநாதபுரம்

சைவ இளைஞர் மாநாட்டில்

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதினம்
திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி அருணாசல
ஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள்

நிகழ்த்திய

தலைமையுரை

சித்தாந்த சிவநெறிச் செல்வர்களே!

சைவமுந் தமிழும் தழைத்தினிதோங்க, தக்க பணிகளை அன்பும் ஆர்வமும் நிறைந்த உள்ளத்தோடு செய்து வரும் உங்கள் பேரவையின் தலைவராக நம்மை ஆக்கிய திருவருளை வந்தித்து வாழ்த்துகின்றோம். வண்ணப் பணித்து வாவென்று வான்கருணைகாட்டிய உங்களுக்கு நமது உளங் கலந்த தூய அன்பை உரியதாக்கிப் பணியிற் செல்ல விழைகின்றோம்.

உலகியலும் கடவுட் கொள்கையும்

காணப்படுகின்ற உலகத்தைக் கருவியாகக் கொண்டு காணப்படாத கடவுளைக் காணுமாறு அறிஞர்கள் சொல்லி இருக்கின்றார்கள். "காணப்பட்ட உலகத்தால் காணப்

படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின் 'ஆதிபகவன் முதற்றே' என உலகின்மேல்வைத்துக் கூறினார்'' என்பது பரிமேலழகரின் உரை. நம்மால் காணப்படுகின்ற இவ் வுலகம் தோன்றி, நின்று, அழிகிறது. இவ்வுண்மையை அறி வியல் நூல்களும், வரலாற்று நூல்களும் ஒத்துக்கொள்கின் றன. உலகம் சடப்பொருள். அதற்குத் தானே தோன்றி நின்று அழிகின்ற ஆற்றல் இல்லை. சடமாய உலகத்தை முத்தொழிற்படுத்துகின்ற தலைவன் ஒருவன் உண்டு. அவன் முற்றறிவினனாக - வரம்பிலாற்றலுடையவனாக - விளங்கு கிறான். இந்த உணர்வு எழுகின்ற நிலையில்தான் சமுதா யத்தை வாழவைக்கும் சமய உணர்வு - இறையுணர்வு - அரும்புகின்றது.

உலகியலின் நடப்பைக் கொண்டு, கடவுளுண்மையை உலகப் பேரறிஞர்கள் பலர் நிலைநாட்டியுள்ளார்கள். இற் றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோமா புரியில் அரசியல் தலைவராய் இருந்த சிசிரோ என்னும் மெய்ந்நூலறிஞர் உலகின் வியத்தகு அமைப்பு கடவு ளுண்மையைச் சுட்டுமாற்றை மிக அழகாக எடுத்துரைக் கின்றார் :

"பொருள்களின் இயற்கை அமைப்பில், மக்களது உணர்வாலும், ஆராய்ச்சி அறிவாலும், ஆற்றலாலும், ஆக்கக் கூடாததொன்று உளது. ஒருதலையாக, அதனை யுளதாக்குவது மக்களின் மேம்பட்டதாதல் வேண்டும். அது கடவுளை அன்றி வேறு யாதாக இருத்தல் கூடும்?'' என்பது அவர் உணர்ந்து உரைக்கும் உரை.

> "There is something in nature of things, which the mind of man, which reason, which human power cannot effect and certainly that which produces this, must be better than man. What can this be but God ?''

"உலகம் எங்கு தோன்றுகின்றதோ, அங்கேயேதான் அதன் ஒடுக்கமும்'' என்பது அறிவியல் முடிபு. மரணப் படுக்கையிலிருந்த சனபோன் (Zenaphon), "எங்கு

நோக்கிடினும், எல்லாப் பொருளும் ஒன்றையே நோக்கிச் செல்கின்றன" என்று கூறிக் கடவுளுண்மையை விளக்கினர். நூலன் என்ற பேராசிரியர் உலகினை மிக நுணுக்கமாக ஆராய்ந்து கடவுளுண்மையைக் கூறியுள்ளதைக் காண்க. காணப்படும் பொருள்களெல்லாம் செயற்கைப் பொருள், இயற்கைப் பொருள் என இருவகையில் அடங்கும். இறைவன் ஆணையால் ஏற்படும் பொருள் இயற்கைப் பொருள். அப்பொருளை ஆதாரமாகக் கொண்டு, மானுட வலிவால் தோன்றும் பொருள்களெல்லாம் செயற்கைப்பொருள்கள். நிலம், நீர், தீ, ஞாயிறு, திங்கள், மீன், மலை, நதி, மரம், செடி, கொடி, பறவை முதலியன இயற்கைப் பொருள்கள். வீடு, மேசை, நாற்காலி, புகைத்தேர், மரக்கலம் முதலியன செயற்கைப்பொருள்கள். இவ்விருவகைப் பொருள்களையும் இயற்றுவார் வலிமையை மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்துச் சற்றேறக்குறைய சமமாகத் தோன்றலாம். ஆனால், நுண்மாண் நுழைபுலம் கொண்டு நோக்குவார்க்கு நிறைந்தபேதம் வெளியாகும். இறைவனாலான பொருள்களெல்லாம், 'உயிருள', 'உயிரில' வாய் அமையும். மனிதராலான பொருளோ உயிரில வாயே அமையும். அதுவுமன்றி இயற்கைப் பொருள்கள் பலவற்றுள் ஒரு சிறு பொருளையேனும், மானுட வலிவால் எத்திறமை கொண்டும் இயற்றுதல் ஒண்ணாது என்பது நூலனின் நுண்ணறிவுரை. "எல்லாவற்றிற்கும் மூலம் கடவுள்" என்றார் பிளேட்டாவும். நமது அருமை அப்பரடிகளும், "தானலா துலகமில்லை" என்று அருளினார்கள். இங்ஙனம் கடவுளுண்மையைக் கண்டு வாழ்ந்தவகையில் வேறெந்த நாட்டையும்விடத் தமிழகம் முன்னிற்கிறது.

தமிழகமும் கடவுட் கொள்கையும்

தமிழகம் தெய்வமணம் கமழும் திருநாடு; இறைமணங் கமழும் இன்பத் திருநாடு. அறவுணர்வும், அருளுணர்வும் முதன்முதலில் தமிழகத்தில்தான் தோன்றின. தமிழினத்தாரின் வாழ்க்கை, சமய வாழ்க்கையாகவே விளங்கியது. அவர்கள் புறஉலகையும், வாழ்க்கையையும் துன்பமெனக் கொண்டனர். இத்துன்பத்தினின்றும் விலகி, இன்பப் பெருவாழ்வைப் பெற விழைந்தனர். இதனை,

"இன்னு தம்ம இல்வுலகம்
இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே"

என்ற புறப்பாட்டின் அடிகளால் அறியலாம். துன்பத்தினை இன்பமாக மாற்ற அவர்கள் கண்டது சமயம். பண்பட்ட சமய வாழ்க்கையினுல் அவர்கள், தங்கள் துன்பத்தை இன்பமாக்கிக்கொண்டார்கள். இச்சாதனையை அவர்கள் பெரியதொரு வெற்றியாகக் கருதினுர்கள். தொல்காப்பியர் சமயத்தின் தோற்றம் வாகைத்திணை என்று சொல்லுகிருர். இக்கருத்தினை,

"பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலினுனும் என்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே"

என்ற நூற்பாவின் அடிகளால் அறியலாம். இவ்வடிகளுக்கு உரைகண்ட பேராசிரியர், சமயவாழ்க்கையை, 'அற வெற்றி' என்று குறித்து, வாகைத்திணைக்கு இயைபுபடுத்துகின்றுர். தமிழ்மக்களது வாழ்க்கையோடு சமய உணர்வு பின்னிக் கிடந்தமைக்குத் தமிழிலக்கியங்களே தக்க சான்றுகளாம். படித்தவர்கள் போற்றும் பத்துப்பாட்டிலே, புலவர்கள் போற்றும் புறநானூற்றிலே, கற்றவர்கள் போற்றும் கலித்தொகையிலே, அறிஞர்கள் போற்றும் அகநானூற்றிலே, பண்புடையோர் போற்றும் பரிபாடலிலே, உலகம் போற்றும் உயர்குறளிலே, இன்னும் மற்றுள்ள இலக்கியங்கள் அனைத்திலுமே கடவுள் மணமும், சிவமெனுந் தேனுந் தேங்கி நின்று ஆரா இன்பத்தை அளிக்கின்றன.

தமிழர் சமயம்

தமிழ்மக்களது அறிவிலே பூத்துக் காய்த்து, அனுபவத்திலே பழுத்த சமயம், வேற்றுமைகளையெல்லாம் கடந்தது; எவ்வகையினரையும் ஏற்றுக்கொள்ளும் முறையில் விரிந்து பரந்து இருப்பது. "அறுவகைச் சமயத்தவரவரைத் தேற்

றுந் தகையன் - தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றுந் தகையன" என்பது அப்பரடிகளின் அருண்மொழி.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு"

என்றும்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்றும், நமது சமயப் பெரியார்கள் தெள்ளத் தெளியப் பேசியுள்ளார்கள். நமது சமய நெறி, 'திருநெறி' என்றும்; 'அருணெறி' என்றும் புகழ்ந்து பேசப்படுகிறது.

தமிழர் கண்ட சமயநெறி சைவ சித்தாந்தத் திருநெறி. இத்திருநெறியின் பழமையைப் பற்றி, வரலாற்றறிஞர்கள் கூறுவன, அறிந்து இன்புறுதற்குரியன. இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் சிவநெறி காணப்படுகிறது. சிந்துவெளி புதைப்பொருள்களை ஆராய்ந்த சர். ஜான் மார்ஷல் துரை அவர்கள், "சிவநெறி, மாக்கல் காலத்துக்கும் அப்பாற்பட்ட பழமை உடையதென்னலாம். அஃது இன்றளவும், தொடர்ந்து இருந்து வருகின்ற மிகப்பழைய நெறியாகும்" என்று கூறியுள்ளார்கள். சைவ சித்தாந்தக் கொள்கையானது தமிழரது பேரறிவின் சிறந்த பயன் என்று போப்பையர் கூறியுள்ளார். அவர் மேலும் திருவாசக மொழி பெயர்ப்பின் முகவுரையில், "The Saiva Siddhanta System, is the most elaborate and valuable of all the religions of India" என்று எழுதியுள்ளார். இக்கருத்தினையே கௌடி என்ற பாதிரியாரும் வலியுறுத்துவதோடு "சைவ சித்தாந்தமே இந்தியர் நினைவின் சீர்மைக்கும், உயர்தர வாழ்க்கைக்கும் எல்லையாகும் பெருமை படைத்ததென்றுங் கூறுதல் தவறாகாது" என்று கூறியுள்ளார். பல மதங்களின் கொள்கைகளையெல்லாம், தன்னகத்தே கொண்டு, அவற்றினும் மிக்க சிறப்புடையதாய், முடிந்த முடிபாய் விளங்குவது சைவ சித்தாந்தத் திருநெறி. சித்தாந்தம் என்ற சொல்லுக்கே முடிந்த முடிபு என்பதுதான் பொருள். "சித்தாந்தமே சித்தாந்தம், அவைக்கு வேறானவை பூருவபக்ஷங்கள்" என்று இரத்தின திரயத்தில் கூறப்பட்டது. "வேதாந்தத் தெளிவாம் சைவ

சித்தாந்தத் திறன் இங்கு தெரிக்கலுற்ரும்" என்ருர் உமாபதி சிவமும். "அந்தம் வேதாந்தம்; அந்ததரம் சித்தாந்தம். ஆகவின் அதனைப் பெற்ருேரது பெருமை கூறுவார், சிவமென்னும் அந்ததரர் என்ருர்" என்பது சிவஞான பாடியம்.

> "ஒரும் வேதாந்த மென்னுச்சியிற் பழுத்த
> ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
> சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
> தேனமு தருந்தினர் சிலரே"

என்ருர் குமரகுருபர அடிகள். இத்தகு பெருமைகள் பொருந்திய சைவ சித்தாந்தத் திருநெறியிற் பேசப்படும் கடவுள் சிவபெருமான்.

துன்பத்தினின்றும் விடுதலை பெற்று, இன்பத்தை நுகர விரும்பிய தமிழ் மக்கள், தாம் கண்ட கடவுளையும், இன்பவடிவினனுகவே கருதினர். இன்பம் என்ற பொருளுடைய சிவன் என்ற பெயரை கடவுளின் பெயராக்கினர். "தமிழென்பது சிவம் இனிமை" என்பது பேரிசைச் சூத்திரம். "தேனினும் இனியார்" என்பது திருஞான சம்பந்தர் தேவாரம். "இன்பன் காண், துன்பங்களில்லாதான் காண்" என்பது அப்பரடிகளின் அருண் மொழி. "எனக்கினியவன், தமர்க்கினியவன், எழுமையும் மனக்கினியவன்" என்பது ஆரூரரின் அருண்மொழி. "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்பது மணிவாசகரின் மணிமொழி. தமிழ்ப் பெருநூல்கள் எல்லாம் சிவபிரானது பெருமையைப் பேசுகின்றன.

> "எல்லா உயிர்க்கும் ஏம மாகிய
> நீரற வறியாக் கரகத்துத்
> தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன்

என்று புறநானூறு பேசுகின்றது. மங்கை பங்கனுகிய சிவபெருமானது திருவடிகளிலிருந்தே மூவகை யுலகமும் முகிழ்த்தன என்று சங்கத் தமிழ் நூலாம், ஐங்குறுநூறு பேசுகிறது.

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகையுலகும் முகிழ்த்தன முறையே"

என்பது ஐங்குறுநூறு. இன்பத் தமிழ்நூலாம் முத்தொள்ளாயிரத்தில் சிவபெருமானின் பெருமையும், முதன்மையும், மிக நன்ருக எடுத்துப் பேசப் பெற்றுள்ளன. முன்னேனுகவும், முழுதோனுகவும் விளங்கும் சிவபெருமான் இவ்வுலகையும், அதன்கண் நாளையும், கோளையும் படைத்தனன். நாளும், கோளும் அவனால் படைக்கப்பட்டிருக்க, அவற்றுள் ஒன்ரும் ஆதிரை நாளை அவனேடு இயைத்து, ஆதிரையான் என்றழைப்பது என்னே! என்று நகைச்சுவைபடப் பேசுகின்ருர் ஆசிரியர்.

"மன்னிய நாண்மீன் மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றென் றயருமால்
ஊர்திரை நீர்வேலி யுலகு."

என்பது முத்தொள்ளாயிரப் பாடல். உலகப் பெருநாவலராம் வள்ளுவரும் "ஆதிபகவன்" என்றும், "செம்பொருள்" என்றும் சிவபெருமானைக் குறிக்கின்ருர். "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றும், "விண்ணேர்கள் அமுதுண்டும், சாவ ஒருவரும் உண்ணுத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்" என்றும் சிலப்பதிகாரம் சிவபெருமானைப் போற்றுகின்றது.

"போகம் ஈன்ற புண்ணியன்" என்று சிந்தாமணி அப்பெருமானைப் புகழ்கிறது. "நுதல் விழி நாட்டத் திறையோன்" என்று மணிமேகலை வாழ்த்துகின்றது. அழிவற்ற மெய்ப் பொருளாகிய அப்பெருமானை "ஈறிலான்" என்று கம்பர் ஏத்துகின்ருர். எனவே சிவபெருமானே முழுமுதற் கடவுள்; பிறப்பு இறப்பு அற்றவன் சிவன்; இன்பந் தரும் இறைவன் சிவன் என்ற கருத்து தமிழ்ப் பெருங் காப்பியங்களால் பெறப்படுகின்றது.

சைவத் திருநெறியின் வளர்ச்சி

சைவத் திருநெறி, மிகப் பழமையதாயினும் தோன்றிய நாள்முதல், சில ஆண்டுகளுக்கு முன் வரையில், நல்லமுறையில், தக்க முறையில் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. சிந்துவெளி நாகரிகக் காலத்தில், சிவநெறி சிறந்திருந்தமைக்குச் சான்று ஆங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட 600-க்கு மேற்பட்ட சிவலிங்கத் திருவுருவங்களாம். பின்னர் சங்க காலத்தில் சிறந்திருந்தமையைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். புறநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு முதலிய சங்க இலக்கியங்களில், சிவ் வணக்கம் தெளிவாகக் கூறப்பட்டுளது. பின்னர், நாயன்மார் காலம் என்று கருதப்படும் கி. பி. 300—900 சைவத்திரு நெறியின் வரலாற்றில் பொற்காலமாகும். அக்காலத்தில், சிவநெறி, தமிழகத்தில் சமண பௌத்தங்களை வென்று செழித்துப் பரவியது. செந்தமிழின் துணைக்கொண்டு செழு நெறியாம் திருநெறி எங்கும் பரப்பப்பட்டது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய சமயாசாரியர்கள் நாடெங்கும், தொண்டர் படையுடன் சென்று சமயப் பிரசாரம் செய்தனர். தமிழகத்தை ஆண்ட சேர சோழ பாண்டிய மன்னர்கள் சைவத்தைப் போற்றி வளர்த்தனர். சோழ மன்னர்களின் ஆலயத் திருப்பணிகள் மிக மேம்பாடுடையன. நாயன்மார்களின் திருமுறைகளை மக்களிடம் பரப்பிய பெருமையும், அவர்களுக்கே உரியது. பின்னர் 17-ம் நூற்றுண்டிற்கு முன்னும் பின்னுமாக, சைவத்தை வளர்ப்பதற்கென பல மடங்கள் எழுந்தன. அம்மடாலயங்கள் தோன்றிய காலத்தில், செய்த அரும்பணிகளை மறுக்கவோ மறக்கவோ யாவராலும் முடியாது. மடாதிபதிகளாக விளங்கிய ஞானப் பெருஞ் செல்வர்கள், செந்தமிழும், சிவநெறியும் வளர அயராது உழைத்தார்கள். உழைப்பும், உலகியலை - மக்கட் பண்பை - ஒட்டியே அமைந்திருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் சொல்லுகின்றோம். கதே என்னும் தத்துவப் பேராசிரியர் ஞானிகளைப் பற்றிப் பேசும் பொழுது, அவர்தம் கடமையை எடுத்துச் சொல்லியுள்ளார். “ஞானிகள் முயல வேண்டுவது உலகத்தை வெறுக்க அன்று ; உலகத்தை அறியவேயாகும்” என்பது

அன்னாரின் அறிவுரை. ஆம்! மக்களின் மன இருளை நீக்கி நன்னெறிக்கு ஆற்றுப் படுத்துங் கடமை, ஞானி களுக்கே உரியது. அக்கடமையை, அவர்கள் திறம்படச் செய்ய முதலில், அவர்கள் உலகத்தை அறிந்துகொள்ளு தல் வேண்டும். இங்ஙனம் உலகத்தை அறிந்து, அதற்கு அஞ்சாது, அருட்பணிகளைச் செய்து வந்தனர் சைவமடாதி பதிகள். மடாதிபதிகளின் அருட்பணிகளால் சிவநெறி வளர்ந்து செழித்திருந்தது.

இன்றைய நிலை

சிவநெறி செழித்த—அருட்பொலிவு கொழித்த தமி ழகத்திலே இன்று நாம் காண்பதென்ன? நினைத்தாலும் கொடுமையாக இருக்கிறது. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் அறிவியலுக்கும், அனுபவத்திற்கும் புறம் பான முறையில் பரப்பப் பெறுகின்றன. தமிழ் இனத் தின் குருதியொடு கலந்து படிந்திருக்கின்ற சமய உணர்ச் சிக்கு உலை வைக்கப்படுகின்றது. அறிவு வளர்ச்சியின் ஆணி வேர், ஒழுக்கமென்னும் கோட்டையின் உயர்ந்த வாயில், என்றெல்லாம் அறிஞர்களால் பாராட்டப் பெற்ற பெரு நெறிக்குப் பிணக்குழி தோண்டத் தூண்டப்படுகிறது. நம்பிக்கைக்கும் நல்வாழ்க்கைக்கும் ஏற்றது என்ற சமய நெறி புறக்கணிக்கப்படுகின்றது. இந்த நிலை நம்மை எங்கு கொண்டுவிடுமோ என்று அஞ்சுகின்றோம். "புயல்-எதிர்ப்புயல்" என்று ஜெர்மானியர்கள் வருணித்த "பழமை பெரிதா? புதுமை பெரிதா?" என்ற போர் மும் முரமாக நடக்கிறது. இப்போர் நல்ல முறையில் சென்று பண்பாடு வளர வகை செய்ய வேண்டுமே யன்றி மக்களி னத்தின் மாண்புக்கு-நல்லற உணர்ச்சிக்கு-ஊறு செய்யுமா னால் அதனினும் கொடியது வேறு யாதாக இருத்தல் கூடும்; சீன ஞானி கன்ப்பூசியஸ் "தென்றலும், வாடை யும்" என்ற பகுதியில் நல்லறத்தை, இன்பத்தைத் தரும் தென்றலாகவும், அல்லாதவற்றை வருத்தும் வாடையாக வும் வருணித்துள்ளார். இன்று தமிழகத்திலே வாடைக் காற்றே வீசுகிறது. அறமல்லாதவற்றைச் செய்தல் கூடாது என்பது தமிழினத்தின் பண்பாடு.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்று தமிழிலக்கியம் பேசுகிறது. ஆனால் அதே தமிழகத்தில் இன்று மாறான காட்சி. அறவுணர்வுக்கும், அழகுணர்வுக்கும், கலையுணர்வுக்கும் நிலைக்களனாய சமய வாழ்க்கை வெறுத்தொதுக்கப்படுகிறது. "மதம் மக்கட்கு அபின்" என்றும் "மதம் மடமையை வளர்க்கிறது" என்றும் வாய் கூசாது பேசுகின்றனர்; எழுதுகின்றனர். சற்று உண்மையைச் சிந்தித்துப் பாருங்கள்.

மதத்தின் அவசியம்

மதமே மனிதனை மிருக வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கைக்குத் திருப்புகிறது. மனிதனை மனிதனாக வாழ வைப்பது மதம். மக்களினத்தை விலங்கினத்திலிருந்து பிரித்துக் காட்டுவது மதம். மனிதன் மிருக உணர்வி லிருந்து மனித உணர்வைப் பெற்றுப் பூரண மனிதனாகி தெய்வத் தன்மை அடைய வழி செய்வது மதம். இக்கருத்தினைப் பெரியார் ஒருவர் "மனிதன் மிருகமும் அல்லன்; கடவுளுமல்லன்; தெய்வத் தன்மையை அடைய முயலும் கடவுள் சிருஷ்டியாவான்" என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். எமர்சன் ரால்ப் வால்ட்டோ என்ற ஆசிரியர், "மனப் பிளவுபட்டுக் கிடக்கும் சமூகத்தில் மன உறுதியை உறுதியாக நிலைக்க வைத்து, உலகத்தைக் காக்கத் தியாகிகளும், மதங்களும் அவசியம் வேண்டும்" என்று கூறுகின்றார். தியாகப் பெருவாழ்வு வாழ்ந்த காந்தியடிகளும் "மதமின்றி மனிதன் வாழ முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இன்றைய அரசியல்

காந்தியத்தின் வழிவந்த இன்றைய அரசியல், "மதச் சார்பற்ற சர்க்கார்" என்ற போர்வையைப் போர்த்துக் கொண்டுள்ளது. அரசியலின் இந்த நிலையைத் துணையாகக்கொண்டு விபரீதமான வியாக்கியானங்களை நாட்டிலே ஒரு சிலர் பரப்புகின்றனர். இதன் காரணமாகக் கல்வி நிலையங்களில் சமயக் கல்வியும், பழக்க வழக்கங்களுங் கற்பிக்க இடமில்லாமல் போகின்றது. ஆனால், "மதச்சார்பற்ற

சர்க்கார்" என்ற போர்வையில் மதவளர்ச்சிக்குரிய பணிகளில் செல்ல விரும்பாது, மதஸ்தாபனங்களில் தலையிட்டு ஆங்கு அருள்வழிச் சேர்ந்திருக்கும் பொருள்களைக்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் சென்னை அரசியலார். அதுவும் இந்துமத ஸ்தாபனங்களுக்குத்தான். அது பற்றிய மசோதா சட்டசபையில் விவாதத்தில் இருந்தபோது நடந்த ஒரு விவாதத்தை உங்களுக்கு நினைவுபடுத்தி மசோதாவைப் பற்றிய முடிவை உங்களுக்கே விட்டுவிடுகின்ருேம். சட்டசபையின் அங்கத்தினர் ஒருவர், "நிர்வாகப் பொறுப்பில் நியமனம் செய்யப்பெறும் கமிஷனர்களும், மற்ற அதிகாரிகளும் இந்துமத வழிபாடுகளில் நம்பிக்கை உள்ளவர்களாக இருத்தல்வேண்டும்" என்று ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அத்திருத்தத்தை சட்ட மந்திரி ஏற்றுக் கொள்ளாது மறுத்து, "பிறப்பில் இந்துவாக இருந்தால்போதும்" என்று கூறிவிட்டார். திருத்தமும் தோற்கடிக்கப்பட்டு ஷரத்தும் நிறைவேறிவிட்டது. இந்த நிலையில் தயாராகும் சட்டம் சமயத்தை வளர்க்குமா என்று சிந்தித்துப் பாருங்கள். இங்ஙனம் அரசியலும், பொது நிலையும் சமய உணர்ச்சிக்கு-வளர்ச்சிக்கு - சாதகமாக இல்லாத நிலையில் - மாறுபட்ட உணர்வோடு இருக்கும் நிலையில் - நாம் கூடியுள்ளோம். நமது நிலையினை நாம் உணர்ந்து சமய ஆக்கத்திற்குரிய பணிகளைச் செய்தல் வேண்டும்.

நமது பணிகள்

(1) ஆத்திரத்தோடும், ஆவேசத்தோடும் சென்னை சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் "இந்து அறநிலைய பாதுகாப்பு மசோதா" சமயத்திற்குச் சவக்குழி தோண்டும் நிலையில் இருக்கிறது. எனவே, அம்மசோதாவை சமய நிலையங்களைத் திருத்தும் முறையில்-சமய வளர்ச்சியைக் கருதும் முறையில் செப்பனிட்டுக் கொண்டு வர அல்லது வேறுவகையில் சமய நிலையங்களைச் சீர்திருத்த (சிதைக்க அல்ல) வேண்டுவன செய்வது சைவப் பெருமக்களது கடமை. இனி சமய ஆக்கத்துக்குரிய சில பணிகளையும் சிந்திப்போம்.

(2) வருங்காலத் தமிழகப் பயிர்களாகிய உங்கள் முன் சில ஆண்டுகளாக உள்ளத்தில் ஊறிக் கிடந்த செயல்

முறைக்கு வாராத சில பணிகளைமட்டும் நினைவுபடுத்து கின்றோம். தமிழகத்தில் இன்று சமய உணர்வு குன்றி யிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். தமிழகத்தின் பல் வேறு கிராமங்களில் பெயரளவில் "சைவர்" என்ற பெய ரோடு (பிறப்பின் காரணமாக) வாழ்கின்றனரே யன்றி அவர்களிடத்தில் சைவ விளக்கமோ, சைவப் பழக்க வழக் கங்களோ சிறிதும் இல்லை. இந்த நிலை அடியோடு மாறுதல் வேண்டும். இளைஞர்கள் ஓய்வு நாட்களில் அயலில் இருக்கும் கிராமங்களில் சென்று ஆங்கு வாழும் மக்களுக்குச் சமய அறிவையும் சமயப் பழக்க வழக்கங்களையும் எடுத்துச் சொல்லுதல் வேண்டும். மேலும் நமது சமாஜத்தினை அர சியற் கழகங்கள் வேலை செய்யும் முறையில் அமைத்து உணர்வோடும் ஊக்கத்தோடும் பணி செய்தல்வேண்டும். பணிசெய்யும் ஆற்றல் உங்களிடத்தில் இல்லையா? அறி வுத்திறன் இல்லையா? அன்புணர்ச்சி இல்லையா? வேண்டு வது மனம்! விரைந்து ஆக்கத்துறையில் பணிசெய்ய வேண்டுகின்றோம். ஏனைய அரசியற்கழகங்களைப்போலவே, நமது சமாசமும், மாவட்டக் கழகம், தாலுகாக் கழகம், நக ரக் கழகம், கிராமக்கழகம் என்று அமைக்கப்பெற்று, ஆங் காங்குத் தன்னலமற்ற அன்பர்களைக்கொண்டு பணிகளைச் செய்தல் வேண்டும். கழக உறுப்பினர்களுக்கு எத்தகைய கட்டணமும் வேண்டாமென்று முதலில் அறிவித்துவிடல் வேண்டும். அன்பும் உறுதியும் நிறைந்த உள்ளத்துடன், சமயப் பழக்க வழக்கங்களை நடைமுறையில் கொண்டுள்ள வர்கள் அனைவரும் கழகத்தின் பொது அங்கத்தினர்கள் என்றும், ஆற்றலுக்கேற்ற வகையில் பொருள் வழங்கு வோர் சிறப்பு அங்கத்தினர் என்றுங் கொண்டு பணிகளைச் செய்தல் வேண்டும்.

சைவக்கழகத்தின் பொருளாக்கத்திற்கு எத்தனையோ எளிமையான வழிகள் உள்ளன. ஆங்காங்குள்ள சிவா லயங்களிலிருந்து, கழகத்திற்கு அரசியலாரது ஆதரவுடன், பொருள் திரட்ட முடியும். சைவமடாதிபதிகளுடைய உதவியையும் பெறுதல்வேண்டும். பல லக்ஷக்கணக்கான பொருள்களைக் கொண்டுள்ள மடாலயங்கள் ஆயிரக்கணக் கில் கழகத்திற்குக் கொடுத்து, உதவும்படிச் செய்தல்வேண் டும். மற்றப்படி அறிவையும் அநுபவத்தையும் கருவி

யாகக்கொண்டு பொருள் திரட்டுதல்வேண்டும். இந்த முறையில் சைவஇளைஞர்கள் குறைந்தது ஐந்தாண்டுகள் தீவிரமாகப் பணிசெய்தால் சைவ உணர்வு, தமிழகத்தில் நிலைத்து நல்ல பயனைத் தரும் என்று நாம் நம்புகிறோம்.

3. இன்றைய தமிழகத்திலே சமயப் புறம்பான பேச்சுகளும், கருத்துக்களும் மிக அதிகமாக இருந்துவருகின்றன. சமயத்தையும், சமயப் பழக்க வழக்கங்களையும் சமய நூல்களையும், பழித்துரைக்கும் உரைகளைத் தக்க ஆதாரங்களுடன், மறுத்து எழுதியும், பேசியும், மக்களிடையே மாறுபட்ட உணர்ச்சி எழாத வண்ணம் காத்துக்கொள்ளுதல் வேண்டும்.

4. தமிழ் உடல்; சைவம் உயிர். தமிழும் சைவமும் மலரும் மணமும் போல என்று சொல்லுதல் வேண்டும். சைவ நாயன்மார்கள் தமிழன் துணைக்கொண்டே சைவத்தைக் காத்தனர்: 'பரப்பினர். இன்றும் சைவத்தின் வளம் குன்றாமைக்குக் காரணம் அவர்களது தீந்தமிழ்த் தெய்வப் பநுவல்களேயாம் என்று கூறினால் அது மிகைபடக் கூறுதலாகாது. சைவ ஆலயங்களும் அறநிலையங்களும் தமிழைப் பேணி வளர்த்தே வளர்ந்தன. இடைக்காலத்தில் ஆலயங்களும் அறநிலையங்களும் தமிழ் வளர்ச்சியில் கருத்துச் செலுத்தவில்லை. இதன் காரணமாக புரியாத - உள்ளத்தைத் தொடாத - வேற்றுமொழி புகுந்து இடம் பெற்றுவிட்டது. இந்தநிலை ஒரு சிலரிடையே சமய உணர்வு குன்றுவதற்குக் காரணமாயிற்று.

தமிழார்வத்தின் காரணமாகத் தமிழுக்கு இடமளிக்காத - ஆக்கமளிக்காத - சமயத்தையும் சமய நிலையங்களையும் வெறுக்கின்றனர் ஒரு சிலர். இவ்வெறுப்புணர்ச்சியை நீக்கி சமயத்திற்கு ஆக்கமளிக்க வேண்டுவது சைவத்தமிழ் மக்களது கடமை. இங்ஙனம் செய்வது சைவத் தமிழ்ப் பண்பாட்டிற்குப் புறம்பன்று. தமிழ்ப் பெருநூலாகும் தொல்காப்பியத்தில்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் சிறந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"

என்ற நூற்பாவின் அடிகளையும், "தானே என்று பிரித்துக் காட்டியது தமிழ் மந்திரம் என்பது அறிவித்தற்கு" என்ற பேராசிரியர் உரையையும் நினைந்து கடமையைச் செய்து சைவமும் தமிழும் வளர வகை செய்ய வேண்டுகின்றோம்.

5. அரசியல் துறையிலும் புலமைத் துறையிலும் நிற் போருக்கு நினைவுச் சின்னங்களும் நினைவு விழாக்களும் நாடோறும் பெருகிக் கொண்டே இருக்கச் சமயத் தலைவர்களுக்கு நாம் அத்தகைய விழாக்களைக் கொண் டாடாது இருப்பது வருந்தத்தக்கது. பெருவிழாக்களின் மூலமும் மாநாடுகளின் மூலமும் தக்க நினைவுச் சின்னங் கள் எழுப்புவதன் மூலமும் நாம் நமது சமய சந்தான ஆசாரியர்களை நாட்டிற்கும், உலகிற்கும் அறிமுகப் படுத்த வேண்டுவது நமது தலையாய கடமை. இன்னும் எத்தனையோ திட்டங்கள் பேசலாம்; எழுதலாம். அதனால் பயனில்லை. "நல்லெண்ணங்கள், செயல்வழிப் பட்டாலன்றி நற்கனவுகளைவிட மேன்மை அல்ல" என்பது எமர்சனின் அறிவுரை. எனவே நமது கடமைகளை—நம் முன்னே நிற்கும் பணிகளை—நாம் செய்ய முற்படல்வேண் டும். முயற்சி நல்ல பயனைத் தந்தேதீரும். "சிறந்ததை நாடு; பழக்கம் அதனை எளிதாக்கும்; இனிதாக்கும்" என்பது பேக்கனின் மூதுரை. மீண்டும் ஒருதரம் உங்களைப் பணி யிற் பயன்காண வேண்டுகின்றோம்.

தொகுப்புரை

இன்று உங்களது நினைவுக்குக் கொண்டுவந்த செய்தி களைத் தொகுத்துக்கூறி முடிக்க விரும்புகின்றோம். உல கியலைக் கொண்டு கடவுள் ஒருவர் உண்டு என்ற உண் மையை உலக அறிஞர்கள் பலர் நிலைநாட்டியுள்ளனர். இறையுணர்வில் உலகின் வேறெந்த நாட்டையும்விட தமி ழகம் முன்னின்றது. தமிழர் கண்ட சமயம் சைவ சித்தாந் தத் திருநெறி. இத்திருநெறி, மிகத்தொன்மையானதாக, முடிந்த முடிபாக, விரிந்து பரந்து இருக்கிறது. சைவத் திருநெறி காட்டும் கடவுளாம் சிவபெருமான் அங்க இலக் கியங்களில் சிறப்பித்துப் பேசப்படுகின்றார். இன்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்

திற்கு முன்னிருந்தே சிவநெறி சிறந்து இருந்திருக்கிறது. பின்னர் சங்ககாலத்து மக்களாலும் நாயன்மார்களாலும், தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களாலும், மடாதிபதிகளாலும் சிவநெறி பேணி வளர்க்கப்பட்டு வந்தது. காலப்போக்கின் மாறுபாட்டாலும், அரசியல் மாற்றங்களினாலும் சில ஆண்டுகளாகத் தமிழகத்தில், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன ; இந்த நிலையில் சமயத்தை வளர்க்க சைவ இளைஞர்கள் சீரிய முறையில் நல்ல திட்டங்களை வகுத்துக் கொண்டு அன்பும் ஆர்வமும் நிறைந்த உள்ளத்தோடு பணிசெய்ய வேண்டும் என்பதாகும்.

முடிவுரை

வருங்கால சைவத்தொண்டர்களாகிய உங்கள் முன் இதுவரையில் திருவருளின் துணைகொண்டெழுந்த கருத்துக்களைச் சொன்னோம். உண்மை நிலையினை உணர்ந்த நீங்கள் உடனடியாகப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதே நமது வேண்டுகோள். ஆலவாய் அண்ணலின் திருமுன் அருள் ஞானசம்பந்தப் பெருந்தகையார் விண்ணப்பித்த விண்ணப்பத்தை விளக்கியருளும் சேக்கிழாரடிகளின் பாடலை உங்களுக்கு நினைவுபடுத்தி அதுவே நமது சிந்தனையும் செயலுமாக இருத்தல்வேண்டுமென்று கூறி முடிக்கின்றோம்.

“ ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம் நின்புகழே யாகவேண்டும் நான்மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே ” என்றார்.

சாது அச்சுக்கூடம், சென்னை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

25-2-51 சீர்காழி சிவாலயத்தில் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் சிறந்த பேச்சுக்கள் தேவார வகுப்பில் நடைபெற்றன.

24-2-51, 25-2-51 குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில் திருவள்ளுவர் திருநாள் நடைபெற்றது. அப்போது பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

3-3-51 பொள்ளாச்சி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் புரிசை - திரு. முருகேச முதலியார் அவர்கள் ஒருமாதகாலமாகச் செய்த பாரதச் சொற்பொழிவின் பட்டாபிஷேகம் நடைபெற்றது.

* * *

கோவில்பட்டி டாக்டர் A. G. கோமதி அம்மாள் எழுதிய "இலைவிபூதி மகிமை" என்ற சிறு நூல் வரப்பெற்றோம். விலை ஓரணா.

* * *

விக்ருதிஹு மார்கழிமீ 23உ (7 - 1 - 1951) ஞாயிற்றுக்கிழமை சாத்தூர் வழக்கறிஞர் - உயர்திரு. T. S. கந்தசாமி முதலியார், M. A. அவர்கள் தலைமையில் விருதை, சைவ சித்தாந்த கழகத்தின் ஆரம்பவிழா நடைபெற்றது.

கழகத்தின் சார்பாக வாரந்தோறும் சைவ சமய சொற்பொழிவுகளும், தேவார திருவாசக முதலிய திருமுறைப் பாடல்கள் ஓதி வாரவழிபாடும் நடைபெற்று வருகின்றன.

கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: திரு. N. குருசாமி பிள்ளை, பங்கீட்டு அலுவலகர், விருதுநகர்—தலைவர். C. சுப்பிரமணிய பிள்ளை, ஏஜெண்ட், மதுரைமில்ஸ்—உபதலைவர். சொ. ப. சுப்பிரமணியன்—காரியதரிசி. ப. பொன்னம்பலம், M. A.,—உபகாரியதரிசி. ந. வள்ளிநாயகம் பிள்ளை—பொருளாளர்.

குறிப்பு

சித்தாந்தம் மாசிமாத இதழில் 68-ம் பக்கத்தில் "ஆடுகின்றிலை" என்பதற்கு "ஓடுகின்றிலை" என்று கைப்பிசகாக விழுந்துவிட்டது. வாசிப்போர் மன்னித்துக்கொள்க.

வரி-2, 10. இவைகளில் 'ஓ' என்பதற்கு 'ஆ' என்று திருத்திக்கொள்க.

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன் ...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம் ...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ...	1	0
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் ...	0	4
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை	0	1
குகார்ச்சனை திருமந்திரம் ...	0	1
திருவாசகத் திரட்டு 6 பை சீவக சிந்தாமணி	1	12
கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல்....	0	3
அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு	0	1
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு	7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல. ...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா விதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா விதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street. Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.